



பல்வகையான ரசனையுடைய வாசகர்களாகிய உங்களுடைய ஆதரவுடன் தொடர்ந்து தாய் வீடு செயற்பட்டுவருகின்றது. தற்போது எமது முயற்சியின் ஓர் படியாகத் தாய் வீடு சிறப்பு மலர் உங்கள் கைக்கு வருகின்றது. இந்த முதலாவது சிறப்பு மலர் எமது மறைந்த ஈழத்து எழுத்தாளராகிய மு.தளையசிங்கம் அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமைகிறது. அவருடைய ஒட்டுமொத்த நூல்களையும் மறுமொழி ஊடக வலையத்தின் ஆதரவுடன் தொகுத்து புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் இம்மாதம் 26 திகதி ரொரன்ரோவில் வெளியிடுகிறது. பெரும் பொருட்செலவில் அமைந்த இந்த முயற்சிக்கும் தாய் வீடு பத்திரிகையின் வாழ்த்துகள்.

இந்த இலக்கிய மலர் முயற்சியும் உங்களின் வரவேற்பைப் பெறும் என்று நம்புகின்றோம். தேவையும் வாய்ப்பும் கருத்தில் கொண்டு அவ்வப்போது இம்முயற்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

இலவச இதழ்களைப் படிக்கும் வாசகர்களுக்கு தரமான இலக்கியங்கள் பற்றிய அறிமுகம் மற்றும் அவற்றை வாசிப்பதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. அந்த இடைவெளியை நிரப்பும் முயற்சியாக இது இருக்கும். குறிப்பாக கனடா வாழ் மற்றும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துடன் தொடர்புடைய இலக்கிய படைப்புக்களும் பதிவுகளும் அவ்வப்போது இடம்பெறும்.

## தமிழ் இலக்கிய விமர்சனம்:

# மு.தவும் இன்றைய போக்குகளும்



மு. பொன்னம்பலம்

தமிழில் இலக்கிய விமர்சனம் பற்றிப் பேச முற்படும் நாங்கள், அதன் தோற்றம் மிக அண்மைக்காலத்துக்குரியதென்பதை நினைவில் கொள்ளல் வெண்டும். தமிழில் ஒழுங்கான இலக்கிய விமர்சனம் என்பது, (Literary criticism proper) நாற்பது அல்லது ஐம்பது வருடங்களுக்குமேல் செல்லாது என்றே சொல்லலாம். தமிழ் ஆதிமொழிகளில் ஒன்றென்றும் அது பல மொழிகளின் தாயாக இருந்திருக்கிறதென்றும் அதன் பழமை பற்றிப் பேசப்படுவதில் உள்ள கணிசமான உண்மை, அதன் விமர்சனத்துறைக்குப் பொருந்தாது என்பதை நாம் அறுதியிட்டுக் கூறலாம். எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழரின் இலக்கியத் தொன்மைக்கு எதிராக முன்வைத்த பிழையான தீவிர அழுத்தத்தை நாம் அதன் விமர்சனத் துறையின் தொன்மைக்கு எதிராகவே அழுத்த வேண்டும். நச்சினார்க்கினியார், பரிமேலழகர் போன்றோர் வரிசையில் வரும் உரைகளையும் நக்கீரரின் 'குற்றமே குற்றம்" போன்ற கதைகளையும் நாம் இலக்கிய விமர்சனத்துறையிலிருந்து ஒதுக்கி விட்டால் நமக்கு எஞ்சுவது எதுவுமில்லையென்றே சொல்லிவிடலாம். இந்நிலையில் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியத் தொன்மைக்கு எதிராக முன்வைக்கும் அழுத்தங்கள் சரியோ, பிழையோ, அந்த அழுத்தங்களில் தொனிக்கும் பற்றின்மை, விஞ்ஞான நோக்கிற்குரிய புறநிலை ஆய்வு, (Objective) போன்றவற்றை தமிழ் இலக்கிய விமர்சனத்துறையின் ஆரம்பக் கருக்கூட்டல்களாகக் கொள்ளலாம். வெறும் ஆரம்பக் கருக்கூட்டல் மாத்திரமே. பலதளப்பார்வைக் கொண்ட பெரும் விமர்சனப் பாய்ச்சல் தமிழில் ஏற்பட இன்னும் பல வருடங்கள் இருந்தன.

இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றைத் தெளிவு படுத்த வேண்டும். அதாவது நான் மேலே குறிப்பிட்ட பல தளப்பார்வை கொண்ட கலை இலக்கிய விமர்சனப்பார்வை தமிழ்நாட்டில் ஏற்படவில்லை, முதன்முதலில் ஈழத்தில் தான் ஏற்பட்டது என்பதே அது. இது பற்றி மு.தளையசிங்கம் குறிப்பிடுகையில் 'அல்பிரட் காஸின் என்ற அமெரிக்க விமர்சகர் ஃபோக்னர், எமிங்வே கால இலக்கியங்களைப் பற்றிக் கூறும்போது, ஆண்மையையும், வீரத்தையும் எதிர்பார்க்கும் ஒரு விரகதாபமுள்ள பெண்ணைப்போல் ஐரோப்பாவும் இனி அமெரிக்காவை நோக்கித்தான் புதியவீரமும் ஆண்மையுமுள்ள இலக்கியத்துக்காக ஏங்கிக்கிடக்கும் என்று உவமித்தார்" என்று கூறுகிறார். இக்கூற்று இக்கால ஈழத்து ஆக்க இலக்கியத்துக்குப் பொருந்துவது சந்தேகத்துக்குரியதாக இருந்தாலும் விமர்சன ரீதியாக முற்றும் பொருத்தமான கூற்றாகவே நிற்கிறது எனலாம். 1960ல் இருந்து 1970 வரையிலான பத்தாண்டு காலப்பகுதியே இத்தகைய வேகத்தையும் பார்வை வீச்சையும் விமர்சனத்துறையில் ஏற்படுத்தியதாக நிற்கிறது.

இது ஒரு சொற்பகாலப் பகுதியெனினும் இக்கால இலக்கிய விமர்சனம் காட்டிய வீச்சும் பார்வை விரிப்பும் பிரமிக்கத் தக்கதாக இருந்தது மட்டுமல்ல, ஒரு பெரும் சுற்று வட்டமொன்றையே போட்டு உலக இலக்கியப் போக்குகள் பலவற்றை ஆய்வு செய்தும் அவற்றைக் கேள்விக்குள்ளாக்கியும் அவற்றுக்கும் அப்பால் போகும் ஆற்றல்களைக் காட்டுவதாகவும் அமைந்தது. மிகுந்த சொற்ப காலப் பகுதி. ஆனால் சாதனை அளப்பரியது. தொழிற்புரட்சி மூலம் நீண்ட 250 வருடகாலப் பகுதியில் மேற்குலகு ஏற்படுத்திய அபிவிருத்தியை, ஸ்ரலின் கால ரஷ்ஷியா திட்டமிடல் பொருளாதாரத்தின் மூலம் 50 வருடங்களில் நிறைவேற்றி நிமிர்ந்ததை ஒத்த செயல் இது. ஆனால் இதே காலத்தில் ஸ்ரலின் கால ரஷ்யாவில் மனிதத்தின் விடுதலை முகங்கள் வெளிப்படும் சாதனங்களான பேச்சும் எழுத்தும் அதனோடு சம்பந்தப்பட்ட கலை இலக்கிய சாதனங்கள் அனைத்தும் அடக்கி ஒடுக்கி நலமெடுக்கப்பட்டன. சர்வாதிகாரத்தின் உச்ச வெளிக்காட்டல் அங்கு நிலவிற்று. மனிதம் மூச்சுவிட முடியாது திணறிற்று. ஆனால் இங்கே ஈழத்தில், அதே ஸ்ரலின் கால ரஷ்ஷியாவின் அனுதாபிகளாய் இருந்த நமது 'முற்போக்கு எழுத்தாளர்" என்போரால் கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஒரு பாரிய இலக்கியச் சர்வாதிகாரம் அறுபதுகளின் ஆரம்பத்தில் முறியடிக்கப்படத் தொடங்கிற்று. இலக்கிய விடுதலை முகங்காட்டலின் கீற்றுக்கள் தெரிய ஆரம்பித்தன.

அறுபதுகளில் இருந்து பாயத் தொடங்கிய இவ்விலக்கிய விமர்சன வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் முற்போக்கு இலக்கியச் சர்வாதிகாரம் வீழ்ந்ததென்பதும் பின்னர் சிதைந்ததென்பதும் இக்காலத்தில் நிகழ்ந்த விமர்சனப் போக்கின் ஒரு சிறு அம்சமே. ஒரு சிறு விளைவே. ஆனால் அறுபதுகளில் ஆரம்பித்து, எழுபதுவரை பிரவகித்த இவ்விலக்கிய விமர்சனப் போக்கின் நோக்கம் பரந்த இலக்கிய நோக்குடையதாக இருந்தது. பலபக்கத்தள விரிவுடையதாக இருந்தது. அத்தோடு எல்லாப் பக்கங்களும் விடுதலை முகமுடையவையாய் இருந்தன. ஆனால் இவையனைத்தும் ஈற்றில் ஒன்றிணைந்து ஒரு பரந்த கோட்பாட்டின் வரவை கோடி காட்டுபவையாய் இருந்தன என்பதே இதன் முக்கியமான அம்சமாகும். இப்பின்னணியில் இவ்விமர்சனப் போக்கு முன் வைத்த முக்கிய கேள்வி இதுதான்:

இன்றைய கலை இலக்கியம் மனிதனுக்குத் தடையா? விடுதலையா?

இக்கேள்வி ஈழத்து இலக்கிய உலகில்தான் ஒலித்தது.

> "கலை இலக்கிய உலகிலும் இது அடிப்படையான உருவ உள்ளடக்க மாற்றங்களைக் கொண்டுவரக் கூடியதாகவும் அந்த மாற்றங்கள் அதைச் சிருஷ்டிப்போரிலும் அதை நுகர்வோரிலும் ஏற்படுத்தக் கூடியனவாகவும் இருக்குமென அவர் நம்புகிறார்.
>
> அத்தகைய கலை இலக்கியப் படைப்புக்களை, 'மெய்யுள்" என்று புதுப்பெயரிட்டழைக்கிறார்."

ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் இது ஒலித்தபோதும் எல்லாத் தேசத்தவர்க்கும் உரியதாகவும் அவர்களின் புரட்சிக்குரலாகவுமே ஒலித்தது. இதற்குக் காரணமாய் இருந்தவர் யார் என்பதே எமது அடுத்த கேள்வியாகும்.

இக்கேள்விக்குரிய பதில்காணல், தவிர்க்க முடியாத வகையில் இக்காலத்தில் விமர்சகர்களாக விளங்கிய க.நா.சு, சி.சு.செ, க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, மு.தளையசிங்கம் போன்றவர்கள் மேல் எமது பார்வையைச் செலுத்த வைக்கிறது. மேலும், ஏ.ஜே.கனகரத்தினா, எஸ்.பொன்னுத்துரை, வானமாமலை, வெங்கட் சாமிநாதன், தர்மு சிவராமு, கனக.செந்திநாதன், கே.எஸ்.சிவகுமாரன் போன்றவர்களும் இக்காலத்து தமிழ் இலக்கிய விமர்சனத்திற்கு பங்களிப்புச் செய்திருக்கிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் எனது விமர்சன நோக்கு வெளிக்கொணரவிருக்கும் கோட்பாட்டு ரீதியான கருத்துருவாக்கத்துக்கு நான் மேலே குறிப்பிட்ட விமர்சகர்களே போதுமானவர்களாக இருப்பதோடு இவர்கள் பற்றிய ஆய்வில், என்னால் விடுபட்டு நிற்பர்களும் தமக்குரிய இடங்களைக் காணக் கூடிய வாய்ப்பேற்படும் என்றும் நம்புகிறேன்.




க.நா.சு, சி.சு.செ போன்றவர்களை ஓர் அணியாகவும் கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றவர்களை இன்னோர் அணியாகவும் கொண்டால் மிஞ்சுபவர் மு.தளையசிங்கமே. அதாவது மு.தளையசிங்கம் மூன்றாம் அணியாக நிற்கிறார். இன்றைய நவீன இயங்கியல் பாஷையில் சொல்வதானால் முதலாம் அணி Thesis ஆகவும் இரண்டாம் அணி Antithesis ஆகவும் நின்றால் மு.தளையசிங்கம் இவ்விரு போக்குகளின் Synthesis (இணைப்பாக) ஆகவும் அதைக் கடப்பவராகவும் நிற்கிறார்!

மூன்றாம் பக்கத்துக்குரியவரான மு.தளையசிங்கத்திடமிருந்து தான் நான் ஏற்கனவே குறிப்பிட்ட கேள்வி எழுந்தது. அதாவது நமது கலை இலக்கியங்கள் மனிதனுக்குத் தடையா விடுதலையா என்னும் கேள்வி. இக்கேள்வியை நோக்கியே அவரது விமர்சன ஆய்வுகள் அவரை இட்டுச் சென்று, இறுதியில் இவற்றுக்கு விடை காணும் கோட்பாடுகளாகவே நிறைவெய்துகின்றன. அறுபதுகளிலிருந்து எழுபதுவரை பிரவகித்த மு.த.வின் இலக்கிய விமர்சனம் இதன் சாதனையாகவே நிற்கின்றது. அவரின் ஆய்வின் முடிவு இன்றைய கலை இலக்கியங்கள் என்பவை மனிதனை அகரீதியான பண்படுத்தலுக்கும் பரவசத்துக்கும் இட்டுச்செல்லும் ஆற்றல் அற்றவையாகவும் இருக்கின்ற அதே நேரத்தில் அப்படி ஒரு ஆற்றல் உள்ளவை போன்ற போலித் தோற்றத்தைத் தரும் பெரும் மாயையாகவும் இருப்பதால் அவை அவன் வளர்ச்சியைத் தடுத்து விடுதலையைக் கடத்திப் போடுகின்றன என்பதே. இதற்குப் பரிகாரமாக அவர் தன்னைத்தான் வழிப்படுத்திய கோட்பாட்டு ரீதியாக முன்வைக்கும் கருத்துக்களே 'கலையை அழிக்கும் கலை! இலக்கியத்தை அழிக்கும் இலக்கியம்!"

அதாவது இன்று மனிதனால் கலை என்றும் இலக்கியம் என்றும் கொண்டாடப்படுபவை, இன்றைய அவன் தேவைகளின் அடிப்படை

45ம் பக்கம் பார்க்க...

# ஆத்மார்த்தமான ஓர் பிரபஞ்ச தரிசனத்தைத் தேடியவர் மு.தளையசிங்கம்

- என்.கே. மகாலிங்கம் -




நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர்களிலும் பார்க்க 37 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்த மு.தளையசிங்கம் அதிகம் பேசப்படக்கூடிய விடயங்களைச் செய்துவிட்டுச் சென்றிருக் கிறார். எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதல்ல முக்கியம். எதைச் செய்தார் என்பதே முக்கியம். அவர் வாழ்ந்ததால் சிந்தனையும், அறிவும், மனித விழுமியங்க-ளும் மேம்பாடு அடைந்திருக்கின்றனவா என்ப வற்றைக் கொண்டே அவர் வாழ்ந்தாரா என்ப-தைக் காண வேண்டும். அவரின் வாழ்க்கை, சிந்தனைகள், செயல்கள், எழுத்துக்கள் மனித நாகரீகத்திற்கு உதவி இருக்கின்-றனவா என்பதேயே பார்க்க வேண்டும்.

மு.த.வாழ்ந்ததுக்கான அடையாளங்கள் அவரின் எழுத்துக்கள் மட்டுமல்ல. அவரின் செயற்பாடுகளும் அடங்கும். அத்துடன், அவருடன் பழகியவர்கள், அவரின் மாணவர் கள், உறவினர்கள், ஊர் மக்கள் அனைவ-ரின் மனதிலும் இன்னும் அழியாத, அன்பான உருவமாக இருக்கிறார் என்பதும் அடையா-ளங்களே.

அவர் புங்குடுதீவிலே படிப்பித்தது ஒரு ஐந்து வருடங்களே. அங்கு வாழ்ந்ததும் அப்பொழுது தான். (அதற்கு முன் இரத்தினபுரியில் வாழ்ந்தவர்) சமூக சேவையில் ஈடுபட்டதும் அப்பொழுதுதான். அந்தக் குறுகிய காலத்-தில் அத்தனை கவர்ச்சி உடையவராக, சக்தியாக, நிறுவனமாக எப்படி வந்தார் என்பதற்கு அது ஒரு சிறிய கிராமம் என்ப-தோ, அங்குள்ள மகா வித்தியாலத்தில் சிறந்த, எவரும் விரும்பும் ஆசிரியராக இருந் தார் என்பதோ மட்டுமல்ல காரணங்கள். உண்மை, நேர்மை, தன்னலமற்ற செயல் கள், ஈடுபாடுகள், அவருக்கு அந்த வசீகர ஆளுமையைக் கொடுத்திருக்கின்றன.

தீவிரம், சிந்தனை, வேகம், எட்டிப் பிடித்து அடைந்துவிட வேண்டும் என்ற அவசரம், விறுவிறுப்பு, துடிப்பு, விவேகம், கூர்மை யான சோம்பலற்ற அறிவு, தேடல், எதை யோ அவசரமாக எடுக்கப் போகும் அவதி, அதைத் தன்னால் பிடித்து விட முடியும் என்ற அபாரமான தன்னம்பிக்கை, அதற் காக எதையும் துறப்பதற்குத் தயங்காத மனம், ஆபத்துக்களை, விளைவுகளை கணக்கில் எடுக்காத பொறுப்பின்மை (ஆபத்துக்களைப் பற்றிய கவலையின்மை, தன்னம்பிக்கையின் பாற்பட்டதாக இருக்க-லாம்), எதையும் தன் அறிவால், நம்பிக்கை யால், நேர்மையால், தன்னலமின்மையால் வென்று விடலாம் என்ற ஓர் ஒப்பற்ற எண்ணம். பொருள், பணம், உறவுகள், தொழில், பாசம் என்பன தடைகள் என்ற குணம். அது ஒரு புரட்சிவாதியின் உண்மையான குணாம்சம். துறவியாகப் போகக் கூடிய மனோபாவம்.

நீற்சே ஆபத்தாக வாழ் (live dangerously) என்று கூறினாரே அதுபோல வாழ்ந்தவர் மு.த. பணம், பொருள், நிலம், சொத்து எவற்றையும் எதுவித கவலையும் இன்றி, பின் விளைவுகள் பற்றிய அச்சமும் இன்றி, மனைவி, மக்கள் நிலை என்னவாகும் என்ற சாதாரண குடும்பஸ்தனின் பொறுப்பின்றி, அள்ளித் தானமாகக் கொடுக்கக்கூடிய, கொடுத்த, அசாதாரணமான, அதிசயமான குணாம்சம் கொண்டவர். உடல் உபாதை-களைக் கூட, (இடைக்கிடை துன்புறுத்தும் ஆஸ்துமாவை) தடையாக எண்ணாமல் தன் ஞானத்துக்கு ஏற்பட்ட சோதனை, அவற்றை யும் கடக்க வேண்டும் என்று அடிக்கடி கூறியவர், செயற்பட்டவர். அக்காலத்தும் கூட, தியானம், எழுத்து போன்றவற்றில் அதிகம் ஈடுபாடு காட்டியவர். ஞானத்துக்கு எவை எவை தடையாக இருக்கின்றனவோ அவற்றைத் துறக்க வேண்டும் என்று அடிக் கடி கூறியவர். சுய உணர்வுடன் ஞானத்தைத் தேடியவர்.

‘இலக்கியம் என்னில் வளர்த்த துறவு, இலக்கியத்தையே துறக்குமளவுக்கு வந்து விடும் என்பதை இப்போது உணர்கிறேன்’ என்றார். ‘சாதாரண மனிதன் எதை எதை பெரிதாக நினைத்து ஈடுபடுகிறானோ அவற்-றிலெல்லாம் ஈடுபடாது, விடுபட்டு, வெளியே நின்று வேடிக்கை பார்த்துச் சிரிக்கும் பிறத்-தியான் போக்கை என்னில் இலக்கியப் பற்று வளர்த்திருக்கிறது’ என்றார்.

சாதாரண மனிதன் என்று அவர் கூறியது உலகாயுதத்தில் நம்பிக்கை வைத்தவர்களை. அவர்களின் உலகியல் ஆசைகளை. அவற்றி லிருந்து விடுபட்டு, அல்பர்ட் கமூவின் ‘பிறத்தியான்’ போக்கு இலக்கியவாதி களுக்கு இருக்க வேண்டிய தகைமைகளில் ஒன்று, வேற்றானாக நின்று வேடிக்கை பார்க் கும் பண்பு அது. அது அவரிடம் நிறையவே இருந்தது. அதாவது, கூர்ந்து அவதானிக்-கும் பண்பு. மூன்றாமவராக நிற்றல் இலக்கி-யத்தால் வந்தது என்கிறார். அது அவருக்கு மேற்கத்தைய இலக்கியப் பரிச்சியத்தால் இளமையிலேயே வந்து விட்டது. அந்த வளர்ச்சியின் பயன்தான் அவரின் துறவு அல்லது ஏற்கனவே இருந்த துறவு மனப்-பான்மையை அது கண்டுபிடித்தது என்கி றார். தியானம் என்பதும் ஆழச் சிந்தித்தல் தானே.

தைரியம் அவரின் உடன்பிறப்பு. மிக மெலிந்த உருவம். அதற்குள் இருந்த வீரம், அறிவு, தன்னம்பிக்கை அதிசயப்படக் கூடியவை. 1971 ஆண்டாக இருக்க வேண்டும். ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்ரர் சி... க்கு முன்னால் நிற்கிறார். சமூகப் பிரச்சினையில் இவரையும் இன்னும் சில இளைஞர்களையும் (நான் உட்பட) இன்ஸ்-பெக்ரர் அழைத்துச் சென்றிருந்தார். இன்ஸ்பெக்ரர் கேட்ட கேள்விகளுக்கு இவர் கையை மேசையில் ஊன்றிக் கொண்டு பதில் சொல்கிறார். இன்ஸ்பெக்ரர் தன் நாட்டண்மை யைக் காட்டுவதற்கு மேசையிலிருந்து கையை எடுத்து, நிமிர்ந்து நிற்கும்படி இவரை ஆங்கிலத்தில் அதட்டுகிறார். ‘நான் எப்படி நிற்க வேண்டும் என்பதை நீர் எனக்குச் சொல்லித் தர வேண்டிய அவசியமில்லை’ என்று ஆங்கிலத்திலேயே பதிலளிக்கிறார், இவர்.

அதே இன்ஸ்பெக்ரரைத்தான் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் நிர்வாகிக ளும் பஞ்சாயத்தினரும் (1971) லஞ்சம் கொடுத்து விடுதலையில் அனுப்பி விட்டு, வேறு பொலிஸ்காரரைக் கொண்டு தளைய-சிங்கத்தையும் அவரின் மாணவரான கவிஞர் சு.வில்வரத்தினத்தையும் இரவு காளி கோவி லில் அமைதியாகத் தியானத்தில் இருந்து சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருக்கை-யில் (தாழ்த்தப்பட்டவர்களைக் கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ள விட வேண்டும், கோயிலுக்குள் வழிபடவிட வேண்டும் என்று கோரி) நையப் புடைத்து அப்போது அமுலில் இருந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ், (சேகுவேராப் புரட்சி முடிந்த காலம்) அவர் களைக் கைது செய்து யாழ்ப்பாணம் கோட்டையில் சிறையில் அடைத்தனர். அவர் கள் சிறையில் இருந்த நாட்களில் ஜே.வி.பி. தலைவர் றோகண விஜேவீரவும், தமிழ் ஈழப் போராளி சிவகுமாரனும் அதே கோட்-டைச் சிறையில் இருந்தார்கள். வேடிக்கை என்னவென்றால் கோயில் நிர்வாகத்தில் இருந்தவர்கள் அனைவரும் மு.த., சு.வி யின் உறவினர்கள். உறவுகளுக்கு அப்பாற்பட்ட பணச் செருக்கும் அதிகாரமும் ஆணவமும், கோயிலும் கடவுளும் தங்கள் தனியுடைமை என்ற மன அபக்குவமும் தான் அவர்களி-டம் காணப்பட்ட குணங்கள்.

விவேகாநந்தர், அரவிந்தர் போன்ற தீவிரவாதி கள் தான் உண்மையான துறவிகளாகவும் முடியும். காந்தியைப் போன்ற சத்தியத்தை மூர்க்கத்தனமாக நம்பிய பிடிவாதக்கார மனிதரால் தான் இந்திய சுதந்திரத்திற்காக சாத்வீக முறையில் போராடவும் முடியும். தன்னை இழக்கத் தயாரான ஒருவரால்தான் சத்தியத்தை, ஞானத்தைத் தரிசிக்கவும் முடியும். உலகத்தையே வெல்லக் கூடிய பயமற்ற பலமும் வரும். உண்மையான பொது-வுடைமைவாதி உலகாயுத வாழ்வையும் துறக்கத் தயாராக இருக்க வேண்டும் என்றார், மு.த. அதுதான் உண்மையையும் பேரறிவையும் பலமாகக் கொண்டு, எந்தச் சர்வாதிகாரமுமின்றி -கட்சிச் சர்வாதிகாரமோ,

45ம் பக்கம் பார்க்க...

> “ *இலக்கியவாதி கதை, கவிதை, நாவல், கட்டுரை எழுதுபவன் என்று தன்னைக் குறுக்கிக் கொள்ளாமல் சமூக, பொருளாதார, அரசியல், ஆத்மீக தளங்கள் அனைத்திலும் மாற்றம் கொண்டுவர உழைக்க வேண்டும். சத்தியத்தை உள்நுழைக்க வேண்டும். சத்தியதரிசனமற்றவன் எல்லாத் துறைகளிலும் தன் ஆணவத்தையே வெளிக்காட்டவே முனைவான் என்றார்.* ”


HomeLife Future Realty Inc.
Independently owned and opereted
416.264.0101
எமது கலைஞர்களின் படைப்புகளுக்கு ஆதரவளிப்போம்
Siva Shanmuganathan
Sales Representative
Direct: 416.545.7482
Joy H. Selvanayagam
Sales Representative
Direct: 416.358.6928


# ஆத்மார்த்தமான ஓர்...

44ம் பக்கத் தொடர்ச்சி...

தொழிலாளர் சர்வாதிகாரமோ- உலகத்தை உண்மையாக உயர்த்த உதவும் என்றார். அங்குதான் சமதர்மம் நிலைக்கும், சத்திய யுகம் வரும், கூட்டு முக்தி அனைவருக்கும் கிடைக்கும் என்றார்.

இலக்கியவாதி கதை, கவிதை, நாவல்,

> “இவருடன் உரையாடத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே அவருடைய வசீகரத் தன்மையால் எவரும் கவரப்பட்டு விடுவர். பெரியவர்களாயினும் சரி, சிறியவர்களாயினும் சரி. அவருடைய மாணவர்கள் அவரால் கவரப்பட்டது ஆச்சரியப்படுவதற்கில்லை. மாணவர்களை அன்பால் அணைத்தவர். தட்டிக் கொடுத்து ஊக்குவித்தவர்.”

கட்டுரை எழுதுபவன் என்று தன்னைக் குறுக்கிக் கொள்ளாமல் சமூக, பொருளாதார, அரசியல், ஆத்மீக தளங்கள் அனைத்திலும் மாற்றம் கொண்டுவர உழைக்க வேண்டும். சத்தியத்தை உள்நுழைக்க வேண்டும். சத்திய தரிசனமற்றவன் எல்லாத் துறைகளிலும் தன் ஆணவத்தையே வெளிக்காட்டவே முனைவான் என்றார்.

மெய்யுள் என்னும் பிரபஞ்ச யதார்த்தத்தில் இந்தப் போலிப் பிரிவுகள் இருக்க மாட்டா என்றார். சத்தியத்தை உள்ளடக்கமாகக் கொண்ட அது அதற்குரிய உருவத்தையும் எடுத்துக் கொள்ளும் என்றார். பொதுவாக அதை மெய்யுள் என்றே அழைத்தார்.

தன் சிந்தனையும் தரிசனமும் அனைவருக்கும் புரியும் என்று காலத்தையும் கடந்து சிந்தித்த ஒரு தமிழ் இலக்கியவாதி ஒருவர் மு.த.வாகத்தான் இருப்பார். இலக்கியப் பிரிவுகளைக் கடந்து சிந்தித்தவர். செயல்படத் துடித்தவர். அந்த ஆத்மாவைப் புரிந்து கொள்வதற்கு, அவரைப் போலப் பெரும் கனவு கண்டவர்களைப் புரிந்து கொள்வதற்கு, நாமும் பெரும் கனவுகளும் இலட்சியங்களும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

மனைவி, மக்கள், உறவினர், வீடு, மொழி, சமயம், நாடு, பணம், உடல், நோய், என்று சிறு சிறு வட்டங்களுக்குள் உறங்கிச் சுற்றிச் சுற்றி வரும் எமக்கு அவற்றை எல்லாம் கடந்து வாழ வேண்டும், மக்கள் அனைவரும் விமோசனம் பெற வேண்டும் என்று துடித்த ஓர் ஆத்மாவைப் புரிந்து கொள்வது கற்பனைக்கு அப்பாற்பட்டதுதான். அந்தக் கற்பனை, கனவு தோல்வியடைந்தாலும் அந்தப் பெரும் கனவைக் காண்பதற்கே பெரு மனமும், பேர் ஆத்மாவும் தேவை.

முதலில் ஒரு பேர் மனித இனம் தோன்றும் என்று அரவிந்தர் கூறினார். பேர் மனித இனத்தில் முதலாது பேர் மனிதனாக மு.த. தன்னையும் தன்னுடன் செயற் பட்டவர்களையும் நினைத்தார் என எண்ண இடமுண்டு. சமூகத்தில் ஞானிகளுக்கு அடுத்தபடியாகத் தயார் படுத்தக் கூடியவர்கள் கலைஞர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர் போன்றோர் என்றார் மு.த. பேர் மனித இனம் தோன்றுவதற்கு இவர்களிடம் அடையாளங்களும் சமிக்ஞைகளும் இருக்கின்றன என்று நம்பினார்.

பரவலாக மனித குலம் முழுவதும் பேரறிவுக்குள்இறங்கும் சத்திய யுகமல்லவா இனி வரப் போகிறது என்று பெருங் கனவுகண்டார் மு.த.

‘புதுயுகம் ஞான அலையின் அறிகுறிகள் மெல்லிய அடிமன உந்தலாகவே சர்வதேச கலை இலக்கிய தத்துவ பரப்பெல்லாம் சிதறிக் கிடக்கின்றன’ என எழுதினார். என்னே நம்பிக்கை!

‘மேதா விலாசத்துக்கும் அற்பாயுளுக்கும் அப்படி என்னதான் நமக்கு எட்டாதபடி ரகசிய உறவோ? அந்தவரிசையில் தமிழிலும் பாரதி, புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், கு.அழகிரிசாமி, மு.தளையசிங்கம் என்று எத்தனை இழப்புக்கள்’ என்ற படுமுடிச்சை அவிழ்க்க முடியாமல் அவஸ்தைப்படுவது சுந்தர ராமசாமி மட்டுமல்ல நாங்களும் தான். (ஜே.ஜே. சில குறிப்புக்கள் -நாவல்) அந்த மேதா விலாசத்தை அறிய விரும்புவது இயல்புதானே? மு.த. இளமையில் காலமானது ஈழத்துக்கும், தமிழுக்கும் சிந்தனைக்கும் பெரும் இழப்பு.

தமிழ் இலக்கியப் படைப்பாளியாக ஆரம்பித்து, தீவிர விமர்சகராக முகிழ்த்து, பிரபஞ்ச தரிசனத்தைத் தேடிய ஒரு சிந்தனையாளனாக வாழ்ந்தவர், மு.த. அவரின் முழுப் படைப்புக்களும் 2007 இல் ‘மு.தளையசிங்கம் படைப்புக்கள்’ என வெளியாகி உள்ளது. ஏறக்குறைய 1100 பக்கங்கள்.

■ ■ ■

# மு.தவும் இன்றைய போக்கு...

43ம் பக்கத் தொடர்ச்சி...

யில் வைத்துப் பார்க்கும்போது, அவன் அகத்தை பண்படுத்தி அவனை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் கொண்டவையல்ல. மாறாக அவனை அப்படி உயர் நிலைப்படுத்துபவையாக நினைக்க வைக்கும் மாயைக்குள் வீழ்த்துகின்றன. இதுதான் மு.தவின் கருத்து. ஆகவே அவை அழிக்கப்பட வேண்டும். ஆனால் இவற்றை எப்படி அழிப்பது? இவற்றை அழிக்கவேண்டுமானால் மனிதனை அவன் அவாவிற்கும் இலட்சியத்துக்கேற்ப, விடுதலைக்கேற்ப வாழப்பணிக்கும் புதுக்கலை இலக்கியவகை உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய, மனிதன் தான் சொல்வது போலவும், எழுதுவது போலவும் வாழவும் தூண்டும் புதுக் கலை, இலக்கியவகையே இன்றுள்ள - சொல்வதுபோல் வாழப்பணிக்காத, உண்மை போன்ற போலி நிழல் விடுத்தும் - போலி கலை இலக்கியங்களை அழி அழிக்கும் கலையாகவும் இலக்கியமாகவும் இனிவரப் போகின்றன. இவையே கலையை அழிக்கும் கலை! இலக்கியத்தை அழிக்கும் இலக்கியம்! இதுதான் மு.தவின் கருத்து. இதை நவீன கலாசாரப் புரட்சியாகக் காணும் அவர், அவற்றை நோக்கி ஆற்றுப்படுத்தும் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் நவீன சத்தியச் செங்காவலர் என்றழைக்கின்றார்.

இக்கருத்தையும் அதற்குப் பக்கபலமாகத் தான் வைத்த கோட்பாட்டையும் மு.த. 25 வருடங்களுக்கு முன்னர் ஈழத்து இலக்கிய உலகில் முன்வைத்தபோது, அதை யாரும் விளங்கிக் கொள்ளவோ நேர்மையான ஆய்வுக்குட்படுத்தவோ முயன்றதில்லை. மாறாக ‘இவை பிற்போக்கு முதலாளித்துவக் கருத்துக்கள்! அமெரிக்க C.I.A சிந்தனை” என கைலாசபதி, சிவசேகரம் போன்றவர்களால் ஒரேயடியாக நிராகரிக்கப்பட்டன. ஆனால் காலந்தான் பொய்யையும் மெய்யையும் உரசிப்பார்க்கும் நேர்மையின் உரைகல். அதனால் இன்று மு.த முன் வைத்த கருத்துக்கள் பரவலான விழிப்பை ஏற்படுத்தியுள்ளதோடு, இன்றைய நவீன கலை, இலக்கிய, தத்துவ கோட்பாடுகளோடு ஒத்தும், அவற்றின் போதாத்தன்மைகளை பூரணப்படுத்தியும் அவற்றுக்குமப்பால் போக விழைவனவாகவும் உள்ளன.

அப்படியானால் மு.த.வை இத்தகைய ஒரு கோட்பாட்டை நோக்கி தனது இலக்கிய விமர்சனத்தை வளர்த்துச் செல்லக் காரணமாய் இருந்த காரணிகள் என்ன? அவர் எப்படி இந்த முடிவுகளுக்கு வருகிறார் என்பவையே எமது அடுத்த கட்டப்பார்வையாகும். இதற்கு முக்கியமாகப் பின்வருவனவற்றை சுருக்கமாக காட்டலாம்.

- இன்று நடைமுறையிலுள்ள மரபுரீதியான மார்க்சீயப் பார்வை.
- இன்றுள்ள கருத்தமுதல் கோட்பாடுகள்
- இவை முன்வைக்கும் நடைமுறையிலுள்ள யதார்த்த சமுகயதார்த்த இலக்கியக் கோட்பாடுகள்.
- இவற்றால் இவற்றை எழுதுவோரிடத்தும் அவற்றைப் படிப்போரிடத்தும் மாற்றங்கள், ஏற்பட்டுள்ளனவா என்ற கேள்விகள்.

இக்கேள்விகள் மூலம் அவர் வந்தடையும் கருத்துக்கள் பின்வருமாறு அமைகின்றன.

- மார்க்சீயம் அடிப்படையான மாற்றத்தக் கொண்டுவரும் தத்துவமாக இருந்திருந்தால் அது அடிப்படையான உருவ உள்ளடக்க மாற்றத்தை கலை இலக்கியத் திலும் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் அது அப்படி எதையும் செய்ய வில்லை. மாறாக அது கலை இலக்கி யத்தில் கடைப்பிடித்த ‘சமூக யதார்த்தக்” கோட்பாடு ஏற்கனவே ஐரோப்பிய அறிவு வாதம் முன்வைத்த யதார்த்த வாதத்தின் ஒரு திரிபும் எச்சமுமே.
- இன்று நடைமுறையிலுள்ள கருத்து முதல் கோட்பாடுகள் மரபு வழிவந்த காலங் கடந்த ஆசாரங்களையும் சடங்குகளை யும் தூக்கிப்பிடிக்கின்றன. இவற்றின் போர் வையில், அழிக்கப்பட வேண்டிய முதலா ளித்துவப் போக்குக்குச் சேவகம் செய்கின் றன. இத்தகைய கூட்டுமொத்த சுயநலத் தைப் பேணி வளர்க்கும் கருவிகளாகவே இன்று கலை இலக்கியங்கள் உள்ளன.
- இன்றுள்ள கருத்து முதல் கோட்பாடு களின் சிறந்த கண்டுபிடிப்பாக இருப்பது, மேற்குலகின் ‘இருந்தலியல்” கோட்பாடே. ‘புலன் உணர்வுக் கொள்கை” பொஸிற் றிவிஸம் போன்ற மேற்குலக விஞ்ஞான தத்துவ மரபிலிருந்து, அவற்றை மீறியெ முந்த மேற்குலகின் சிறந்த தத்துவக் கோட்பாடாய் இதைக் கொள்ளலாம். ஆனால் மனித இருப்பின் ஆழத்தை அறியாது, இடைத்தரிப்பை இருப்பெனக் கொள்வதால் இது பூரணமடையாத ஒன்று.

இவற்றுக்கெல்லாம் பதிலாக மு.த.முன்வைப் பது மெய்முதல்வாதம் என்னும் கோட்பாடாகும். இது இன்றைய உலகில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியதாகவும் அதனால் இருத்தலியல் போக்கின் பூரண வளர்ச்சியாகவும் நிற்கிறது என்கிறார் மு.த.. அதனால் கலை இலக்கிய உலகிலும் இது அடிப்படையான உருவ உள்ளடக்கமாற்றங்களைக் கொண்டுவரக் கூடியதாகவும் அந்த மாற்றங்கள் அதைச் சிருஷ்டிப்போரிலும் அதை நுகர்வோரிலும் ஏற்படுத்தக் கூடியனவாகவும் இருக்குமென அவர் நம்புகிறார். அத்தகைய கலை இலக்கியப் படைப்புக்களை, ‘மெய்யுள்” என்று புதுப்பெயரிட்டழைக்கிறார். இந்த ‘மெய்யுள்” வார்ப்புகளையே அவர் கலையை அழிக்கும் கலையாகவும் இலக்கியத்தை அழிக்கும் இலக்கியமாகவும் பிரகடனப்படுத்துகிறார். இதற்கு உதாரணமாக அவரது ‘மெய்யுள்” நூலில் இடம் பெறும் ‘கலைஞனின் தாகம்”, ‘அண்டை வீடுகள்” போர்ப்பறையில் இடம் பெறும் பல ‘கட்டுரை” ‘கதை” ‘கவிதை”களையும் நாம் கொள்ளலாம். இவற்றைப் படிக்கும்போது, விமர்சனமாகவும், உளவியல் ஆய்வாகவும், தத்துவமாகவும், கலையாகவும் பன்முக அர்த்தமுடையவையாய் இருப்பது தெரிய வரும்.

இத்தகைய முடிவுகளுக்கு அவரைப் படிப் படியாக கொண்டுவருவதற்கு உந்து சக்தி யாக இருந்த போக்குகள் நமது கலை இலக்கிய உலகில் பரவலாகச் செறிந்து கிடந்தன. இவை பற்றிய ஆய்வுக்கு நாம் மீண்டும் மு.த.வின் சமகால இலக்கிய விமர்சகர்கள், சிருஷ்டியாளர்கள் பக்கம் திரும்ப வேண்டும்.

■ ■ ■




எமது கலைஞர்களையும் அவர்தம் படைப்புக்களையும் கௌரவிப்பதன் மூலம் ஆரோக்கியமான சமுகமொன்றைக் கட்டியெழுப்புவோம்

Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

RBC

IA INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave., Toronto,
Ontario, M1L 4B5
Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220
E-mail: guna@lilandinsurance.com

# மு.தளையசிங்கம்: இந்த யுகத்தின் சத்திய காவலர்



த. சிவதாசன்

"தற்காலம் ஒரு புது யுகத்தை நோக்கி மாறிக்கொண்டிருக்கிறது. நாம் இரு உலகங்களுக்கிடையே கிடந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஒன்று செத்துக் கொண்டிருக்கிறது மற்றது பிறக்க முயன்றுகொண்டிருக்கிறது"

மு.த. என்று இலக்கிய உலகம் அடையாளப்படுத்திய மு.தளையசிங்கம் புங்குடுதீவு மக்களுக்கு மிகவும் அந்நியமானவர். பாரதி, புதுமைப்பித்தன் வரிசையில் அடுத்து உட்காரும் இந்தச் சிந்தனாவாதிக்குரிய இடம் ஈழத்தில் இன்றுவரை கொடுக்கப்படவில்லை.

இதனால் மு.த.வைப் பற்றிய அறிமுகம் முதலில் இங்கு அவசியமாகிறது.

மு.தளையசிங்கம் 1935ல் புங்குடுதீவில் மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். கல்லாப் பெட்டியில் கணக்கைப் பாத்துக் கொள்ளும் சந்தான மரபிலிருந்து தன்னை மாற்றி இலக்கியத்தின் மூலம் இன்னுமொரு உலகத்திற் புகுந்து கொண்டவர். புவியியலிற் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு ஆசிரியரானார். 1957ல் எழுதத் தொடங்கினார். இவரது வேகமான சிந்தனைகளிற் பிறந்த விமர்சனங்கள் பல இலக்கிய ஜாம்பவான்களை உலுக்கியது. மேலான வாழ்வுக்கான சமூக பொருளாதார மாற்றங்கள் சத்திய நிலையை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்ற எழுச்சிக் கோஷத்தை முன்வைத்து அவர் எழுதினார். 'முதலாளித்துவ அமைப்பும் பொதுவுடமை அமைப்பும் சத்திய எழுச்சிக்குரிய தளங்களுக்கு வழிவகுக்க வேண்டும்' என்ற அவாரது கூக்குரல் புரிந்தவர்களுக்கு நாராசமாகவும் புரியாதவர்களுக்கு பைத்தியக்காரப் புலம்பலாகவும் கேட்டது.

'ஏழாண்டுகால இலக்கிய வளர்ச்சி'. 'புது யுகம் பிறக்கிறது', 'போர்ப்பறை', 'மெய்யுள்', 'யாத்திரை', 'கல்கி புராணம்' என்று பல நூல்களும் பற்பல கட்டுரைகளும் இவரது சத்திய அழைப்பின் வடிவங்கள். இவரது எழுத்துக்கள் சர்ச்சைகளையும் சலசலப்புக்களையும் ஈழத்து இலக்கிய வட்டத்தில் ஏற்படுத்தின. இதுவே இவரைப் பலர் நாடி வந்து ஒட்டிக் கொள்ளவும் பலர் தம்மை இவரிடமிருந்து வெட்டிக் கொள்ளவும் காரணமாயிற்று.

1966ல் மு.த. தனது ஆன்மீக குருவான ஸ்ரீ நந்தகோபாலகிரியை இரத்தினபுரியிற் சந்தித்தார். தனது கலைப்பார்வையைப் பிரபஞ்ச யதார்த்தம் என்றழைக்கும் மு.த.வின் வாழ்க்கை பற்றிய பார்வையில் பல மாற்றங்கள் இக்காலகட்டத்தில் ஏற்பட்டன. புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகி அங்கு தனது ஆன்மீகத் தளத்தை மேலும் விரிவு படுத்தினார்.

1968ல் சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்து தனது சமூகப் பணிகளைப் பரவலாக்கும் கருவியாக அரசியலைப் பிரயோகிக்கும் நோக்கத்தில் குறுகிய கால அரசியற் பிரவேசம் செய்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காய் கடுமையாக உழைத்தார். 1971ல் புங்குடுதீவு கண்ணகையம்மன் கோவிற் கிணற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் நன்னீர் பெறும் பொருட்டு இவர் நடாத்திய போராட்டத்தின்போது காவற்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். பின்னர் நோய்வாய்ப்பட்டு 1973ம் ஆண்டு சித்திரை மாதம் 2ம் திகதி தன் உலகப் பணியை முடித்துக்கொண்டு பிரபஞ்ச மடியில் நித்திய தூக்கத்தில் ஆழ்வதே யதார்த்தம் என்று சென்றுவிட்டார்.

மு.த. வைப் புரிய வைக்க இக்கட்டுரை முயற்சித்தால் அதில் வெற்றி பெறாது. அவரது சிந்தனைத் தளத்தை என்னால் அணுகவே முடியாது என்பதை முதலில் ஒத்துக் கொள்கிறேன். மு.த. புங்குடுதீவைச் சேர்ந்தவரானாலும் அவர் உலகத்தின் சொந்தக்காரார். அப்படியொரு உலகத்தரமான சிந்தனாவாதி ஒருவரைப் பெற்றிருந்தும் அனுபவிக்காமற் போய்விட்டது புங்குடுதீவு மக்கள் செய்த துர்ப்பாக்கியம். 1966 தொடக்கம் 1973ல் அவர் மரணமாகும் வரை அவர் புங்குடுதீவில் வாழ்ந்த காலம் அவ்வூர் மக்களின் பொற்காலம் என உறுதியோடு சொல்லலாம். அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு ஆசிரியராகவோ, இலக்கிய வாதியாகவோ, சமூகவாதியாகவோ அல்லது குறுங்கால அரசியல்வாதியாகவோ அல்லது சிலர் கண்களில் 'ஒரு பனியனாகவோ' பார்க்கப்பட்டிருக்கலாம். அப் பார்வைகளுக்கு அவர் கொடுத்த தரிசனம் வேறு. உலகச் சிந்தனாவாதிகளுக்கு அவர் கொடுத்த தரிசனம் வேறு. அவர் உலாவந்த பல்வேறு மனத்தளங்களை அறியும்போதுதான் அவரின் கருத்துலகம் பற்றி முழுதாக அறிந்து கொள்ளும் பாக்கியத்தை நாம் பெறுவோம்.

'மு.தளையசிங்கம் இருபதாம் நூற்றாண்டிற்குரிய பிரச்சினைகளையும் ஓரளவு இருபது நூற்றாண்டுகளின் சாரத்தையும் வெளிப்படுத்த முயன்ற ஒரு சிந்தனையாளர். பிரச்சினைகளுக்கு விடைகள் தேடிச் செல்லும்போது தனது தேசம், தனது மொழி, தனது சமயம், தனது இலக்கியம் ஆகிய வற்றின் வட்டங்களிலிருந்து விடுதலை பெற்று, முன் தீர்மானங்களின் சொச்சங்களை சுமக்காமல் உண்மைகளைத் தேடிச் சென்றவர். பிரச்சினைகள், அவற்றைப் புரிந்து கொள்வதற்கான தயாரிப்பு, விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சிகள், உணர்வு நிலைகள் தாண்டி தருக்க மொழியில் தன் எண்ணங்களைக் கூறல். இவைதான் தளையசிங்கத்தின் அடிப்படையான பண்புகள்.' என்று மறைந்த எழுத்தாளர் சுந்தர ராமசாமி அவர்கள் குறிப்பிடுவார்.




இத்தகைய பண்புகளைக் கொண்ட ஒரு மனிதர் எம்மத்தியில் வாழ்ந்து மறைந்தார் என்பதை உலகம் சுட்டி நாம் பார்க்க வேண்டிய கடப்பாடு.

ஈழத்துக் கலை இலக்கியம் பொதுவுடமை வாதிகளின் தத்துவப்பிடியில் அகப்பட்டிருக்கும் காலத்திலேயே சத்திய ஆயுதத்தைச் சுழற்றிக்கொண்டு பிரவேசிக்கிறார் மு.த. பல்வேறு பிரச்சினைகளால் சஞ்சலப்படும் மனிதனின் உடனடித் தீர்வாக பொழுது போக்கு இலக்கியம் என்ற போர்வையில் கலையையும் இலக்கியத்தையும் அவர்கள் பயன்படுத்துவதைச் சாடுகிறார். மனிதனின் அகத்தையும் அவன் வாழும் சமூகத்தையும் பூரணப்படுத்தும் முக்கிய மருந்துகளில் ஒன்றாகவே கலை இலக்கியத்தை அவர் பார்த்தார்.




இங்குதான் மு.த. வின் சுழல் வீச்சு விமர்சனம் ஆரம்பமாகிறது. பல முற்போக்கு, நற்போக்கு, தேசீய இலக்கியக் காப்பாளர்கள் என்று பலர் இவ்வீச்சில் அடிபட்டு வீழ்ந்தார்கள். 'கலை கட்சிக்காக' என்று கலையைச் சித்தாந்த அறிவு வழியில் மட்டும் காட்டி இலக்கியத்தை வெறும் இயந்திர முயற்சியாக நிறுத்தி வைத்திருந்த பலரால் மு.த. வை எதிர்கொள்ள முடியாமற் போனது. தம்மால் முடியாதபோது மு.த. வின் சுழல் வீச்சு விமர்சனப் பயணத்திற்கு அடிக்கடி கட்டை போட்டுக் கொண்டார்கள். இவை எவற்றினாலுமே அவரது பயணத்தை தடுக்கவோ நிறுத்தவோ இயலாமற் போனது. 'இன்றய மனிதனின் பரிணாம நிலையில் பூரணமின்மையே அவனது நோய் என்றும் அதற்கான தீர்வைத் தரவல்லது சர்வோதயப் பொதுவுடமையே' என்று கர்ச்சித்த மு.த. வின் மெய்முதல்வாதக் கோட்பாடு வீதியுலா வந்தது.

பிராய்ட், மார்க்ஸ், ஏங்கெல்ஸ், ஹேகல் மட்டுல்லாது இந்திய பண்பாட்டின் ஆழத்தையும் அறிந்து வைத்திருந்தவர் மு.த. கலை இலக்கியம், விஞ்ஞானம், சமய ஞானம் என்று பல களங்களிலும் அவர் இலகுவாகப் பொருந்தக்கூடியவர். மஹாத்மா காந்தி, வினோபாபாவே, அரவிந்தர் ரமணர் போன்றவர்களின் சத்திய மரபை அவர் வரித்துக் கொண்டது வெறும் விபத்தல்ல.

"எப்போது மனிதன் உண்மையின்- சத்தியத்தின் - அழகைத் தரிசிக்க ஆரம்பிக்கிறானோ அப்பொழுதுதான் உண்மையான கலையும் உதயமாகிறது.

வாழ்க்கையே எல்லாக் கலைகளிலும் உயர்ந்தது. பூரணத்துவத்துக்கு சமீபித்து விட்ட மனிதனே உயர்ந்த கலைஞன். உயர்ந்த வாழ்க்கை பற்றிய எல்லைகளும், அவை பற்றிய உரமான அடிப்படையுமற்ற கலை எதற்காக?' என்ற மஹாத்மா காந்தியின் வாசகங்களே மு.த. வின் வாழ்வை வளப்படுத்தியவை. தான் நம்பிய, வரித்துக் கொண்ட தத்துவத்தைத் தன் வாழ்விலே பரீட்சித்துப் பார்த்த பின்னரே அதைச் சமூகத்தில் பிரயோகித்தவர் மு.த. இதனால் மரபு சார்ந்த இலக்கிய நடைமுறைகளை அவர் பல தடவைகளில் கட்டுடைத்தார். 'மெய்யுள்' என்ற அவரது படைப்பு இத்தகையது. சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்ற பாகுபாடுகளை உடைத்தும் கடந்தும் செல்லும் உருவம் அது. "இதுகாலவரையுள்ள இலக்கிய உருவங்கள் எல்லாம் பெரும்பாலும் கற்பனைத் தளங்களுக்குரியவையே. கற்பனைக் கோலங்கள் அனைத்-

51ம் பக்கம் பார்க்க...

# மு.தளையசிங்கமும் மெய்யியலும்



கௌசலா

இலக்கியவாதி, சமூகப்போராளி எனப் பலமு கங்களை வெளிப்படுத்தியுள்ள மு. தளைய சிங்கம் பற்றி எனக்கு அறிமுகமாகிக்கொண்ட மெய்யியலாளராக அவரை நோக்குவது பொருந்தும் என எண்ணுகின்றேன். சரித்திரப் பார்வையையும், பரிணாமம் அல்லது கூர்ப்பின் அடிப்படையிலும் இவர் அறிதியிடுக் கூறும் மெய்யியலை, அதில் தாக்கத்தை யும் தொடர்பையுமுடைய ஏனைய சில மெய்யியல் கூறுகளையும் சுருக்கமாகத் தொட்டுச்செல்ல முற்படுகிறேன்.

ஃபிராய்டின் மனத்தளங்கள் பற்றிய கோட்பாட்டில் பரிணாம வளர்ச்சியையும் சரித்தி ரத்தையும் ஆன்மிக நிலையில் பொருத்தி யிருக்கும் ஒரு வெளிப்பாடே மு.த கூறும் பேர்மனநிலை அல்லது பூரண சர்வோதயம் எனக் கொள்ளலாம். தற்கால அரசியல், பொருளாதார ஆதிக்கம் சார்ந்த உலகமய மாதல் தோற்றம்போல ஒட்டுமொத்த உலகமும் ஒரே தளத்தில் அதாவது அவர் கருதியதும் சமயங்கள் குறிப்பிட்டதுமான பேரானந்தநிலையில் பொருந்தும் காலத்திற் கான சூழல் பிறந்துவிட்டது என்பதையே திரும்பத்திரும்ப அவர் எழுத்துக்கள் கூறுகின்றன. மனத்தின் இன்னொரு தளத்தில் இது நிகழும் சாத்தியங்களை ஈழத்தினதும் உலகத்தினதும் அரசியல் பொருளாதார மாற்றங்களையும் இலக்கியக்கியப் போக்குகளையும் காட்டுவதன் மூலம் இதை நிறுவ முயல்கிறார்.


அடிப்படையில் தான் ஒரு எழுத்தாளனாக இருந்ததாலும் நடைமுறை வாழ்க்கைச் சூழல் மார்க்சிய கருத்தியல்களின் தாக்கமுற் றிருந்ததாலும் மானிட எழுச்சிக்கு படைப்பாளிகளை முன்நிறுத்துகிறார். எழுத்தாளர்களையும் வகைப்படுத்துகிறார். 'மரபு', 'மரியாதை' என்ற சொற்களினுள் சமூகத்தின் தேக்கத்தினால் ஏற்படும் பிற சுழிவு களோடு ஒத்தோடுபவர்களை

1. இதுவரையாக உணரப்பட்ட உண்மை களை கட்டுப்பெட்டியாக பேணுபவர்கள்

2. வெறும் போலிகள் எனவும் இவற்றை உடைத்துக் கொண்டு புதிய உண்மையைத் தேடும் படைப்பாளிகள் மரபிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு புதிய கோணத்தில் சமூகத்திற்கு கருத்துக்களைக் கொடுக்க வேண்டும் என்கிறார். 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றை மேலுமொரு படி சென்று சடம், உயிர், மனம் நிலைகளைத் தாண்டிய பேரறிவின் பேர்மனநிலைக்கு தயார்ப்படுத்தும் பொறுப்பை படைப்பு வர்க்கத்திடம் ஒப்படைக்கிறார். சமூக, அரசி யல், பொருளாதார மாற்றங்களை ஏற்படுத் தும் வகையில் படைப்புக்கள் அமைதல் பற்றியும் அதற்காக எழுத்தாளர்கள் உண்மை யை நோக்கி வாழ்க்கையையும் எழுத்தை யும் திருப்புதலை வலியுறுத்துகிறார்.

ஒட்டுமொத்தமாக உலகில் வெளிப்படும் அதிருப்திகள் தனிமனிதரிலிருந்து குழு, இனம் ஈறாக நடக்கும் போராட்டங்கள் அவர் குறிப்பிடும் சத்திய - உண்மை நிலையை எட்டுவதற்கான வெளிக்காட்டல் கள் என்பதை 'போர்ப்பறை' யிலும், 'மெய்யுளிலும்' காணலாம். சரித்திரத்தில் ஏற்படும் தேக்கம் அடுத்த பாய்ச்சலுக்கான கருக்கூட்டல் என்பது இவர் கருத்து. இதை யே 1956 வரையான ஈழஅரசியல், இலக்கிய தளத்திலும் வாதிடுகிறார். அமெரிக்கா போன்ற பொருளாதார வளர்ச்சி கண்ட நாடுகளில் உள்ள பீட்னிக்ஸ், ஹிப்பீஸ் மக்களின் நிலையும் நாளாந்த வாழ்க்கை யில் அந்நியமாகிப் போகும் மனங்களின் நிலையும் கூட இந்த நிறைவின்மையின் வெளிப்பாடேயாகும். நிறைவில்லா இனமும் மனமும் போராட்ட குணத்தைக் கொண்டிருக் கும். போராட்டம் என்பது தேடலின் ஒரு வடிவமாயிருக்கும். ஆனால் போராட்டங்கள் பெறக்கூடிய நிறைவென்பது 'சத்தியத்தை உணர்தல், சத்தியமாக மாறுதல்" என்பதை நிறுவுகின்றார்.

மு.த கூறும் கடந்த பிரம்மநிலை என்பதற்கு அவர் வந்த வழிகளாக இதுவரையான மெய்யியலாளர்களின் கருதுகோள்களை எடுத்தாண்டுள்ளார். இறுதியில் எல்லாச் சமயங்களும் கூறவிளையும் இறுதிப் பேரானந்தநிலையை தற்கால விஞ்ஞான அடிப்படையில் மேல் மனத்தைக் கடந்த பேர்மனநிலை என்கிறார். இப்பேர்மனநிலை




யில் இதுவரையான வரலாறு, மொழி, கலை, பண்பாடு யாவும் பொருளற்றுப்போன தன்மை நிலவும். அவ்வுண்மை நிலையை விளக்க தற்கால மொழி பயன்படாது. தற் கால அறிவுத்தளத்திற்கு எட்டாத நிலையில் இருப்பதால் அச்சத்திய பேர்மனநிலையின் இருத்தலை மறுக்கமுடியாது. ஆதலால் அதை உணர்ந்து கொள்ளக் கூடிய அருட் டல்கள் இப்பொழுது நடைபெறுவதாக கூறுபவர் அவ்வப்போது தோன்றிமறையும் ஞானிகளை இவ்வருட்டலுக்கு சான்றாக் குகிறார்.

சார்த்தரின் முரண்படல், போராடல், அர்ப் பணித்தல்(புதிய நிலைக்கு) என்ற கருத்தை மு.த எடுத்துள்ள மழுச் சட்டகமாகக் கொண்டால் ஹெகலின் வரலாற்று இயங்கி யல் இதன் உள்ளோட்டமாகக் காணப்படு கிறது. மார்க்ஸியத்தின் பொருள்முதல் வாதம் உண்மைத் தேடலின் ஒரு படியாக இருந்தபோதிலும் அகம் சார்ந்த ஆன்மீகப் பகுதியை ஒதுக்கியதால் அதனால் வெற்றி யடைய முடியவில்லை என்கிறார். மார்க்ஸின் மாற்றம் மாறா விதி என்பதை அத்தத்துவம் உள்ளெடுக்காததால் அளவை மீறிச் செல்ல அதனால் முடியவில்லை.இவ்வாறே சமயங் களும் ஆன்மீகத்தை முன்நிறுத்திவிட்டு நடைமுறை உலக அரசியல் பொருளாதார மாற்றத்தை ஒதுக்கியதால் இன்னும் முழு மையடையவில்லை. எனவே சமயத்தின் புற வெளிப்பாடுகளை விடுத்து அது கூற விளைந்த உண்மைகளை மார்க்ஸியம் எடுத்திருத்தல் வேண்டும்.

அமைதியும், சமாதானமும் வெறும் சமூகத் தேக்கமாயின் அது ஒரு வர்க்கத்தின் அறியாமையையும், ஆணவத்தையும், அதன் சுரண்டலையும் நிரந்தரமாக்குவதாக அமை கிறது ஆதலால் போராட்டங்களும் புரட்சி களும் உண்மையை நோக்கிய அடுத்த கட்ட நகர்வைத் துரிதப்படுத்துகின்றன என்பது இவர் கருத்தாகும்.

பௌத்தம் கூறும் உலகாயத நிலைகளி னூடாக நிர்வாணத்தை அடைதல் என்பதை இவர் பார்வை ஒத்திருந்தாலும் பைபிளில் உள்ளதுபோன்று கடவுளின் வருகைக்கான மெசியாக்களின் முன்அறிவித்தல்கள் போன்று இவர் எழுத்துக்களிலும் அடிக்கடி வரும் சொல்லாடல்கள் காணப்படுகின்றன. யுகப் பகுப்புக்களிலும் சாதிப்பகுப்பிற்கு இவர் கற்பிக்கும் காரணம் முற்றுமுழுதான வேதத் தின் பாதிப்பையே காட்டுகின்றன. சடநிலை கள் உருப்பெறும் காலம் ஒரு யுகமெனவும் அதிலிருந்து உயிர்த்தோற்றம் அடுத்த யுகமெனவும் இவர் கூறும் வரிசைப்பிடி மனிதர் மனநிலையைக் கடந்த பேரறிவின் பேர்மன நிலையை அடைவது இனிவரும் யுகமாகி றது. சடம், உயிர், மனம் எனும் நிலை களுக்கு மனித குணங்களைப் பொருத்திப் பார்க்கும் நிலையும் இவ்வாறானதே. மனதைக் கடந்து அறிவின் எல்லையைத் தொட்டு சிந்திக்கும் நிலையில் வாழ்ந்த மு.த சாதிப் பகுப்புக்குக் கூறியிருக்கும் காரணங்கள் எல்லாவற்றையுமே மீளவும் கேள்வியாக்கி அவர் கூறவந்தவற்றை முரணுடையதாக்கி மனிதாபிமானத்தையே இல்லாதொழித்துள்ளது. அரவிந்தர் போன் றோரின் தாக்கங்கள் இவருள் நிறைய இருந்தாலும் மெய்ஞானநிலைக்கு இனங்களை வரிசைப் படுத்தியுள்ளமை நீட்ஷேயை ஒத்துள்ளதை மறுக்கமுடியாது. உலகை ஆளுவதற்குச் சிறப்பான இனமுண்டு என கிட்லர் உருவாகக் காரணமான கருத்தியல் இதுவாகும்.

இதுவரையான உலக மெய்யியல் வெளிப் பாடுகளை உள்வாங்கியும் அவற்றை மேவியும் அவற்றிலிருந்து கடந்த அல்லது வேறான ஒரு மெய்யியல் தளத்தை நிறுவி தன்னை ஒரு மெய்யியலாளனாகக் காட்டு வதில் மு.த வெற்றியடைந்துள்ளார். ஆனால்




வர்ணப்பாகுபாட்டிற்கான காரணத்தில் அதைத் தோற்கடிக்கிறார். இப்பகுதி பற்றி மு.த பற்றிக் கூறிவந்த எவரும் குறிப்பிடாதது ஆச்சரியத்தையும் பல கேள்விகளையும் எழுப்புகிறது. சத்தியயுகத்திற்கான ஆயத்தப் படுத்தலில் கலைஞர்கள், சிந்தனையாளர் கள், விஞ்ஞானிகள் முன்னணியில் உள்ள வர்கள் என்று காட்டிய வர்க்கவேறுபாட் டைக்கூட அறிவின் அடிப்படையில் என்று ஒரு வாதத்திற்காகக் கொண்டாலும் நால்வர்ணப் பாகுபாட்டை நியாயப் படுத்தி யிருப்பதை என்னவென்பது. இவர்களைத் தவிர மக்கள் கூட்டத்தில் எவரும் அறிவை அடையமுடியாதா? அப்படியானால் இவர் கூறும் அறிவு என்ன? புலனறிவோ, காட்சியறி வோ அன்றி சமணம் குறிப்பிடும் கேவலஞான அறிவு. மனநிலையிலிருந்து உள்அருட்டலி னால் ஏற்படும் மனங்கடந்த பேரறிவு நிலை என்றே குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் இவர் குறிப்பிடும் அவ்வறிவு தன்னிலை யறியும் எவருக்கும் உரியதும் எட்டக் கூடியதுமே.

'மெய்யே மெய்யில் கொண்டு மெய்யறிவில் செல்லுங் கோனே" என்கிறார் இடைக்காட டுச் சித்தர். இது மு.தவின் எழுத்துக்களி லும் மீண்டும் மீண்டும் ஒலித்தாலும் இடை யிடையேயான முரண்பாடுகளும் இல்லாம லில்லை. சடம்என்பது இன்றைய விஞ்ஞானத் தின்படி சக்தியை உள்ளடக்கிய நிலையே அதாவது அதனுள்ளான அணுவும் அதற் கான சக்தியும் எனும் இவரது விளக்கம் ஒரு எடுத்துக் காட்டாகும். இதைப் பண்டைய தமிழர் அறிவியலும் எல்லாம் பிரம்மத்தின் வடிவு எனும் சமயக் கருத்தியலும் கூறி யுள்ளன.

வரலாற்று இயங்கியல் எவ்வாறு இருந்தது? இனி எவ்வாறு இருக்கப்போகிறது? என்ப தனடிப்படையில் இதுவரையான கோட்பாடு, மதிப்பீடு, மெய்யியல் வெளிப்பாடுகளிலிருந் தும் அவற்றை மீறியும் எழும் சிந்தனை இனிவரும் மெய்யியல்த் தளமாக இருக்கும் என்பதே இவரின் எண்ணப்பாடாகிறது. முற்று முழுதாக ஒதுக்கமுடியாததான நிலையை யும், ஒரே முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத இரு சாத்தியப்பாடற்ற எதிர்மை நிலைகளுக்கிடையேயான முழுமையான நிலையின் இருப்பிடம் - சாத்தியப்பாட் டையே மு.த கோரி நிற்கின்றார். அதாவது பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் என்பது போய் இனி மெய்முதல்வாதத்திற் கான காலம் என்கிறார்.

இப்பூரண நிலையை சங்கரரின் அத்வை தமாகவும், வள்ளலாரின் ஒரு பிரம்ம ஆத்ம ஒளியாகவும், புத்தரின் நிர்வாணமாகவும் அம்பேத்காரின் சகோதரத்துவ சமத்துவமாக வும், மார்க்ஸியத்தின் பொது உடமை யாகவும் தமிழின் யாதும் ஊரே யாவரும் கேளிர் ஆகவும் இன்னபிறவாகவும் உணர முனையலாம். ■ ■ ■

# தற்செயலாய் ஏறிய பேருந்து

**- மெலிஞ்சி முத்தன் -**




அன்று மரணத்தை மிக அருகில் சந்தித்தேன். அது, பாதை கடந்துகொண்டிருந்த என்னைத் தேடி, ஒரு வேகமான வாகனத்தில் வந்தது. என்னைச் சுற்றியோர் காற்றுச் சுழியை உண்டுபண்ணிவிட்டு என் முன்னே ஓர் சிவப்பு விளக்கைப்போல நின்று சிரித்தது. அது, தன்னைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த என்னை மிக அருகில் வந்து உற்றுப் பார்த்தது. அதை ஏற்றிவந்த வாகனம் என்னைத் தாண்டிச் சென்ற பின்னும், அது என்னோடு ஒரு நெடுநாள் நண்பனைப்போல உரையாடிக்கொண்டிருந்தது. தேய்ந்து போகாதவைகளும், கட்டிபட்டுப் போகாதவைகளுமான புதிய வார்த்தைகளைத் தேடி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்....

அந்த நாட்களில் இந்த உலகத்தின் மீதிருந்த நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்துகொண்டிருந்தேன். உலக வரலாற்று இயங்கியல் நிலைகளை ஆராய்ந்த மிகப் பிந்திய கோட்பாட்டு வடிவங்களின் ‘புதுயுகத்தை’ எதிர்கொள்ள முடியாமையின் விளைவினால் உருவாகிப் பரிணமித்து நிற்கும் பிரச்சினைக் கூறுகளைக் காவிநிற்கும் கூட்டங்களுக்குள் நான் எந்தக் கூட்டம் என்கின்ற வினாக்களிலிருந்து விடுபட்டு எனக்கானதோர் தத்துவப் பின்புலத்தை நான் கண்டடைய வேண்டிய தேவையொன்று இருந்தது.

எனது தப்பியோடல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போதுதான் என்முன்னே ஓர் சிவப்பு விளக்கைப்போல் மரணம் வந்து நின்றது. மரணத்துடனான அன்றைய உரையாடல் எனக்குள் இறுகிக்கிடந்த பல கட்டுக்களை அவிழ்த்துவிட்டது. மரணத்திலிருந்து பின்னோக்கிய எனது பாய்ச்சல், உள்ளுணர்வின் உந்தல்களுக்கு கலைவடிவம் கொடுக்கும் உத்தியை நான் கையிலெடுக்கச் செய்தது. ஆயினும், எழுதுதலுக்கும் கிழித்தலுக்கும் இடையிலான என் இருத்தற் கணங்கள் மிகவும் அரிதாய் இருந்தன. எனக்குள்ளிருந்த ஒருவன் எழுதிக்கொண்டிருக்க, இன்னொருவன் கிழித்துக்கொண்டிருந்தான்.

என் எழுத்துக்களில் உருவாகி, சில கணங்களே தலைகாட்டிப்போன பாத்திரங்கள் பல, மிகவும் மென்மையான வெள்ளை நிறப் பேய்களாய் என் கனவுகளில் வந்து குசுகுசுத்தன.

நான் எனக்குள் வெள்ளைநிறப் பேய்களை உருவாக்குவதற்காகவே எழுதிக் கிழித்தேன். கனவுகளைத் தூரத்தில் நின்றே தீர்மானிக்கும் ஓர் அலைவரிசையில் நான் இணைந்துகொண்டேன்.

புறவுலகின் படிமங்களாய் பல கனவுகள் எனக்குள் வந்து குவிந்தன. என் கனவுகளில் வந்த புளியமரங்களில் சம்மனசுகள் தூக்கிலிடப்பட்டிருந்தன. கோழிகளை உரிப்பதுபோல் சம்மனசுகளின் இறகுகள் சடசடக்க யார்யாரோவெல்லாம் உரித்துக்கொண்டிருந்தனர். கடைவாயால் சம்மனசுக் கறி வழிந்தொழுக சம்மனசு தின்ன என்னையும் அழைத்தார்கள். அப்போது பற்களின் ஈறுகள் எங்கும் காரியக் கூர்கள் முளைத்து கூர்களெங்கும் குருதிசொட்ட என் வாய் நிறைய வார்த்தைகள் செத்த வாடை வீசிக்கொண்டிருந்தன. செத்துப்போன வார்த்தைகளை மீண்டும் மீண்டும் என் மனசுக்குள்ளேயே புதைத்தவாறிருந்தேன். மனம் முழுதும் ஒரு நீண்ட இடுகாடு வளர்ந்திருந்தது.

புற உலகின் கால மாற்றம்போல, அக உலகின் காலங்கள் மாறுவதில்லை. நிகழ் காலத்தைத் தொடராமலேயே என் இறந்த காலங்கள் எதிர்காலங்களின் மீது பாய்ச்சல் நிகழ்த்தின. மரணத்தை மிக அருகில் வந்தித்து அதனுடன் உரையாடல் நிகழ்த்துவதும் ஒரு செறிவுமிக்க கலையென்று



அப்போதுதான் எனக்குப் புரிந்தது. மரணத்துடன் நான் உரையாடிக்கொண்டிருந்த அந்தக் கணங்களில் வாழ்க்கை எனக்குள் பாதங்களிலிருந்து உச்சிவரை முட்டிக் கொண்டு நின்றது. வாழ்க்கையின் வீச்சினை சமய ஞானத்தின் அடித்தளத்தில் உருவான எனது தத்துவார்த்த நிலையில் உரசி, புறவுலகுக்கான தீர்வுகளை முன்வைக்க முனைந்துகொண்டிருந்தேன். மரணமோ மிகுந்த அமைதியாக என் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றது.

அந்த வீதியில் ஊதிப் பொருமி வந்த பேருந்து ஒன்றில், அது எங்கே செல்கின்றது என்பதைப் பார்க்காமலேயே ஏறி அமர்ந்துகொண்டேன். நான் தற்செயலாய் ஏறிய பேருந்து, நான் செல்லவேண்டிய சரியான இடத்துக்குத்தான் செல்கின்றது என்பதை எனது இருக்கையின் முன்னே அமர்ந்திருந்த ‘நல்லசிவம்’ என்ற மனிதரிடம் கேட்டு அறிந்துகொண்டேன்.

நல்லசிவத்தை முன்னர் எப்போதோ, எங்கேயோ கண்டிருக்கின்றேன். ஆனால், எங்கே, எப்போது என்றுதான் நினைவில் இல்லை. அவர் என் பயணம்பற்றி விசாரித்தார்.

நான் மரணத்துடன் உரையாடிக்கொண்டிருந்ததையும், புதிய தத்துவமொன்றைக் கண்டடைய நகர்ந்து கொண்டிருப்பதையும் அவரிடம் சொன்னேன். எல்லாவற்றையும் கேட்டவர் என்னுடன் பேசினார்.

“நீ வாழும் உலகத்தின் வன்முறைப் போக்கும், இவ்வுலகத்தை மறுத்து மறு உலகை வலியுறுத்தும் பழைய முறைச் சமயப் போக்கும் இணைந்து மரணத்துடனான உன் உரையாடலுக்கு உந்து சக்தியாய் அமைந்திருக்கின்றன என்று நினைக்கின்றேன்” என்றார்.

“ஆமாம், சரியாகச் சொன்னீர்கள். இப்புறவுலகின் மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்க என் அக உலகத்தில் தேடுகின்றேன். யாரும் மறுக்க முடியாதவாறு மனம் வளர்ந்து, உடலை உடைத்துக்கொண்டு ‘பிரமரந்திரத்தை’த் திறந்து விரித்தவாறு இருக்கின்றது. இப் போதைய நிலையில் நம்மிடமுள்ள தத்துவங்களின் போதாமை மிகவும் துல்லியமாகத் தெரிகிறதல்லவா?’ என்றேன்.

இதைத்தான் நான் என்றோ இந்த உலகத்திற்குச் சொல்லிவிட்டேனல்லவா?

எல்லாச் சிறைகளையும் உடைத்துக்கொண்டு மனம் வளர்வதை யாரும் தடுக்க முடியாது. ஆயினும், அதன் ஆரம்ப எழுச்சியைக்கூட யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லையே. இவர்கள் நினைப்பதுபோல, வர்க்க வேறுபாடுகளைத் தாண்டிய – பொதுவுடமைச் சோசலிசத்தை மட்டும் அடைந்தால் போதாது. அதைத் தனியாகக் கொண்டு வருவதும் முடியாது. பொதுவுடமைப் போராட்டத்தோடு, அகத்தே காணப்படும் குணவேறுபாடுகளையும் அதேசமயம் முழுச் சமூகமும் தாண்டினாற்றான் உண்மையான சோசலிசமும், உண்மையான ஞான எழுச்சியும் சர்வோதயமும் அடுத்த கட்ட மனிதப் பரிணாமமும் வர முடியும் என்றார்.

பழைய தத்துவங்களின் நன்மைகளைக் கறந்துகொண்டு, அவற்றின் உருவங்களை அழிக்கவேண்டும். இன்னுமொரு பெரும் தத்துவத்தால் அதைச் சிதைக்க வேண்டும். உருவாகும் தத்துவம் சிந்தனையளவில் இருந்தால் மட்டும் போதாது - வாழ்க்கையை மாற்றி வளர்க்கும் செயல் செறிந்த சிந்தனை. அதுவே தத்துவம். அதுவே நான் கண்டடைந்த ‘மெய் முதல் வாதம்’ என்றார்.

நான் தலையசைத்தேன். மெய்முதல் வாதத்தின் கூர்மையான புரிதல்களின் அடித்தளத்திலிருந்து நம்மை வளர்த்தெடுத்து, இந்த உலகத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டடைய வேண்டுமென்று முடிவெடுத்தேன். நாங்கள் சென்றுகொண்டிருந்த பேருந்து சிறகு முளைத்து மேலே மேலே பறந்துகொண்டிருந்தது.

■ ■ ■

## மு.தளையசிங்கம் படைப்புகள்

# நூல் வெளியீடு:

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்

**Scarborough Civic Centre**
**McCowan & Ellesmare**
**150 Borough Drive**
**Toronto, ON**

ஸ்காபரோ சிவிக் சென்டர்

காலம்: 26.01.2008

நேரம்: பி.ப. 1.00 - 6:00 வரை

**416-887 6715, 647-892 3448, 416-888 8650.**

## படைப்பினூடாக படைப்பாளியை அறிதல்:

# மு.த.வும் அவரது 'புதுயுகம் பிறக்கிறது' சிறுகதைகளும்



தேவகாந்தன்

ஈழத் தமிழிலக்கியத்தில் மு.த. என அழைக்கப்படும் மு.தளையசிங்கத்தின் இடம் நாற்பதாண்டுகளின் முன்னாலேயே வாசகப் பரப்பில் நிர்மாணம் பெற்றுவிட்டது. ஆனாலும் அது ஈழத்து இலக்கிய வரலாற்றில் போது மான அளவு பதிவாகவில்லையென்பது தீவிர இலக்கிய வாசகர்களிடையே கடந்த சில பத்தாண்டுகளாக நிலவி வரும் மனக் குறையாகும். ஒருவகையில் மு.த.வின் பெயர் ஓர் இருட்டடிப்புக்கு உள்ளாகும் நிலைமையையும் அடைந்து கொண்டிருப்பதாய் அவர்கள் கருதினார்கள். இதற்கெதிரான முன்முயற்சிகள் சிறுபத்திரிகைகள் அளவிலேயே முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டன.

'அலை' பத்திரிகை இதை பலதடவைகளில் முன்மொழிந்திருக்கிறது. அதன் ஆரம்ப கால ஆசிரியர்களில் ஒருவரான அ.யேசுராசா காட்டிய அக்கறை இவ்விஷயத்தில் முக்கிய மானது. இவரே மு.த.வின் எழுத்துக்களை முதன்முதலாக சுந்தர ராமசாமியிடம் கொண்டுபோய்ச் சேர்த்தவர். இது நடந்தது எண்பதுகளின் ஆரம்பத்தில். அதன் உடனடியாக சுந்தர ராமசாமியும் மு.த.வின் எழுத்தாளுமை குறித்து ஒரு கட்டுரை எழுதினார். அது அவர் ஆசிரியராக இருந்த காலாண்டிதழ்க் 'காலச் சுவடு' இதழில் வந்தது என ஞாபகம். அதுஒரு தனிநூலாக பின்னால் வெளியிடப்பட்டது.

ஒரு வரலாற்று திசை மாறற் காலகட்டத்தில் அதற்கு உந்துவிசை தரக்கூடிய எழுத்துக்கள் போற்றப்படுவதும், வளர்க்கப்படுவதும் அவசியமான காரியங்களே. இடதுசாரி அரசியல் இயக்கத்தின் ஒரு முன்னணிப் போராளியாக முற்போக்கு இலக்கியம் வளர்ந்ததின் தாற்பரியம் இதுதான். பேராசிரியர்கள் கா.சிவத்தம்பியும், க.கைலாசபதியும் அதன் விமர்சனப் பிதாமகர்களாய் இருந்தார்கள் என்பதுதான் இக் காலகட்டத்திய விஷேசம். அவர்கள் முற்போக்குச் சார்ந்த எழுத்தாளர்களைத் தூக்கலாகப் பேசினார்களே தவிர, அத் தளத்திலிருந்து விடுபட்டிருந்த அல்லது மாறான படைப்பாளிகளை முற்றுமுழுதாய்ப் புறக்கணித்தார்கள் என்பது விசாரணைக்குரிய விவகாரம்.

இன்று பேராசிரியர் கா.சிவத்தம்பி மீது எஸ்.பொன்னுத்துரை சாட்டும் தன்னை முற்று முழுதாக அவர் புறக்கணித்தார் என்ற அபவாதம் உண்மையற்றது என்பதே எனது கருத்து. எஸ்.பொ. இக் குற்றச்சாட்டினைத் தெரிவித்த அக் குறிப்பிட்ட நேர்காணல் ஒரு சஞ்சிகையில் வெளிவந்ததன் பின்னர், உடனடியாகவே ஒரு தேடலில் இறங்கிய போது, அவர் மீதான மதிப்புவாய்ந்த என் மதிப்பீட்டளவுக்கு கா.சிவத்தம்பியும் கூறிவிட்டிருந்ததை அறிய முடிந்தது. மு.த. விஷயத்திலும் இது உண்மையே. ஆனாலும் மு.த.வின் படைப்பாளுமைக்கு மேலான விஷயங்களிலும் அவரது மேன்மையை நிலைநாட்ட வருமிடங்களில் முரணகளே எஞ்சும்.

மு.த.வின் படைப்பாளுமை தமிழ்நாட்டில் தெரிய வந்த எண்பதுகளின் ஆரம்பத்தில், அது இன்னொரு படைப்பாளியான சுந்தர ராமசாமி மூலமாகவே வெளிவர முடிந்திருந்தது. அது ஒரு சரியான அணுகுமுறையும்தான். ஆனால் இரண்டாமாயிரத்தின் முதல் தசாப்தத்தின் முற்பகுதியில் ஊட்டியில் மு.த.வின் படைப்புகள் குறித்த கருத்தரங்கு நடைபெற்றபோது அதில் வெளியிடப்பெற்ற கருத்துக்கள், சுந்தர ராமசாமி வெளியிட்ட கருத்துக்களின் அணுகுமுறை சார்ந்ததாய் இருக்கவில்லை.

2002இல் இக் கருத்தரங்கு நடைபெற்ற போதுதான் ராஜநாயஹத்துக்கும் கருத்தரங்கு அமைப்பாளர்களுக்கும் இடையே நடைமுறை குறித்தான பிரச்சினை தோன்றியது. இணைய தளங்களில் அது குறித்த விவாதங்கள் நடந்தன. ஒருவகையில் நான் எழுதிய கட்டுரையொன்று அவ்விவாதங்களின் முடிவுப் புள்ளியானதெனினும், சில நண்பர்களை நான் இழக்க நேர்ந்ததின் காரணமாயும் அமைந்தது. கருத்தரங்கின் நடைமுறை ஒழுங்கு குறித்தே ராஜநாயஹத்துக்கும் அமைப்பாளர்களுக்கும் இடையே முரண் தோன்றியிருப்பினும், விவாதம் வேறு தளத்துக்கு நகர்ந்தது துர்ப்பாக்கியம். அதை அப்போது காலச் சுவட்டோடு- சு.ரா.வோடும்தான்- பேதப்பட்டிருந்தவர்களும் விரும்பவில்லை என்பதே நிஜம். ஆனால் பிரச்சினை அதுவல்ல, என்னளவில்.

மார்க்ஸீயம் ஒரு நவீன சிந்தனையாக அரசியல் சமூக தளத்தில் உலவ ஆரம்பித்த கணத்தில் ஒப்பதும் மிக்கதும் இல்லாததாகத்தான் இருந்தது. அது உடனடியாக அனைத்துச் சிந்தனையாளர் படைப்பாளிகளினதும் ஆதர்ஷத்தைப் பெற்றது. முதல் சோஷலிச குடியரசான சோவியத்துக்கு எதிரான அமெரிக்காவின் கருத்தியல் யுத்தத்தின் வயது சுமார் எழுபத்தைந்து ஆண்டுகள். அது ஜெயம் கொண்டதா இப் போதும் என்பது விவாத தளத்தில் நிச்சயப் படுத்தப் படுவதற்குரியதல்ல. ஆனால் இந்த அலையோடு தமிழ்நாட்டில் ஒரு மாயைக் கருத்துலகு விரிந்தது. அந்த வலையின் ஒரு கயிறாகத்தான் இலக்கியத் துறை கருதப்பட்டது. அதற்காதரவானவர்கள் நிச்சயமாக நன்றாகவே உழைத்தனர். இந்த உழைப்பின் அடையாளம்தான் மு.த. ஊட்டி கருத்தரங்கு. இது கைலாசபதியை அவர் தளத்திலிருந்து இறக்குவதற்கான முயற்சியுமாகும்.

கைலாசபதி-சிவத்தம்பி காலம்வரையில் பல்கலைக்கழக மட்டத்தில் மார்க்ஸீய விமர்சன முறைமை ஓர் அங்கீகரிக்கப்பட்ட விமர்சன முறையாக ஆகவில்லை. தமிழ் நாட்டில்கூட. நா.வானமாமலை, சிதம்பர ரகுநாதன் போன்றோர் ஏற்கனவே இவ் விமர்சனத் துறையில் ஈடுபட்டிருந்தாலும், பல்கலைக்கழக மட்டத்துக்கு மார்க்ஸீய விமர்சனத்தை இவர்களாலும் முன்னெடுக்க முடியவில்லை. சமூக நிலைப்படும் அந்த விமர்சன முறை பெருவழக்காய் ஆனதின் பின்னரே சிதம்பர ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்', பொன்னீலனின் 'கானல்' போன்றன தகுந்த இடம் பெற்றன எனச் சொல்லல் வேண்டும். இதற்காக தி.ஜானகிராமனின் 'மோகமுள்'ளை அவர்கள் புறக்கணித்தார்கள் என்றில்லை. அவர்கள் கல்கியையும், நா. பார்த்தசாரதியையும், சாண்டில்யனையுமே ஒதுக்கினர். இந்த அளவுவரை தீவிர இலக்கியவாதிகளுக்கும் உடன்பாடாகவே இருந்தமை நிஜமா, இல்லையா? ஆனாலும் இந்த விமர்சன ஆளுமைகள் நுண்ணரசியல் சார்ந்த இலக்கிய உலகில் பிரியப்படத் தக்கதாய் இருக்கவில்லை. எனவே மு.த., எஸ்.பொ. பிரச்சினை கிளப்பப்பட்டது.

மு.த.வின் முறை முடிய, எஸ்.பொ.வை அவர் தளத்துக்கு மேலாகத் தூக்குவதற்கும் ஒரு முயற்சி நடந்தது. ஆனால் அது செயங்கொள்ளவில்லை. ஈழத்து இலக்கிய வரலாற்றில் மு.த.வும், எஸ்.பொ.வும் ஒதுக்கப் பட்டதாய்க் குரல் கொடுத்தவர்கள், ஒட்டு மொத்த தமிழிலக்கிய வரலாறு இப் படைப்பாளிகளை ஒதுக்கி தமிழகத்தில் எழுதப்பட்டிருப்பதற்கு என்ன சொல்லப்போகிறார்கள்?

என்னுடைய விவாதமெல்லாம் இந்த வலைகளின் பின்னணி இல்லாமலே மு.த.வும், எஸ்.பொ.வும் சிறந்த ஆளுமைபெற்ற படைப்பாளிகள் என்பதுதான். அவ்வகையில் சிறுகதைத் துறையில் மு.த.வின் பங்கை விசாரிப்பதே என் முயற்சி. ஆனாலும் அதற்கான விரிந்த தளம் இதுவல்ல என்பதையும் நானறிவேன். ஒரு மேலோட்டமான பருவரைக் காட்சியை முன்வைப்பதே இங்கு எனக்கு முடியும்.

ஒவ்வொரு படைப்பிலும் ஒரு நுண்ணரசியல் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது நூறு வீதமான உண்மை. தான் அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என படைப்பாளி எவ்வளவு தான் அறுதியிட்டுரைத்தாலும் இந்நுண்ணரசியல் அப்படைப்பில் இருக்கவே செய்யும். ஒரு படைப்பைக் கட்டவிழ்த்தல் மூலமாகவே இது கண்டுணரப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் 'புதுயுகம் பிறக்கிறது' சிறுகதைத் தொகுப்பில் தொழுகை, கோட்டை, புதுயுகம் பிறக்கிறது, இரத்தம் போன்றவை என் விருப்பத்துக்கு இசைந்த வரிசையில் நல்ல கதைகளாக இருந்தன. இன்று இக் கட்டுரைக்காகவே ஒரு மீள்வாசிப்பைச் செய்தபோது இரத்தம், தொழுகை, புதுயுகம் பிறக்கிறது, கோட்டை என்று அதன் வரிசைக் கிரமம் மாறிவந்தது. அது இயல்பானதுதான். என் வளர்ச்சியில் இந்த வாசிப்பும், அதன் வரிசைக் கிரமும் மாறுவது தவிர்க்கவியலாத அம்சம்.

'தொழுகை' சமூக அசைவியக்கதின் மீது விழுகிற அடியாகக் கருதப்பட முடிந்தால், 'இரத்தம்' அதன் அசைவிறுக்கத்தில் விழுகிற அடிதான்.

தொழுகை அதன் ஆரம்பத்தில் அரசு வெளியீடாக வந்தபோது கொண்டிருந்த பிரதிக்கும், அது க்ரியா பதிப்பாக வந்தபோதிருந்த பிரதிக்கும் வித்தியாசமிருப்பது தெரிகிறது. அவ்விரண்டினையும் ஒப்பிட்டுப் பார்க்க எனக்குள்ள வசதியீனம் கவலை தான். ஆனாலும் இந்த ஞாபகத்தை ஒரு பதிவுக்காகச் சொல்லிவைக்கிறேன்.

இரத்தம் சிறுகதை மிகச் சாதாரணமானதாகத்தான் இருந்தது சமீபத்திய காலம் வரைக்கும். ஆனால் திடீரென விஸ்வரூபம் எடுத்ததுபோல் அது உயர்ந்து நிற்கிறது. கார்க்கி ஒருமுறை சொன்னாராம், 'சுவரில் ஒரு துப்பாக்கி இருப்பதாகச் சிறுகதை தொடங்கினால் கதை முடிவதன் முன்னர் அது வெடித்தே ஆகவேண்டும். இல்லா விட்டால் துப்பாக்கியைப் பற்றிப் பேசி விடாதே' என்று. அது ஒருவகையில் சரியாகத்தான் இருக்கிறது. இரத்தம் சிறுகதையிலும் கமலத்தின் வசையாக சிலவார்த்தைகள் வரும். அந்த வசைவை முன்வைத்தே முழுக் கதையும் நகர்ந்திருக்கும். இது ஒரு சிறந்த சிறுகதையாக ஆகியிருந்த வேளையில் அதன் அரசியல் கட்டுடைக்கப்படாமலே இருந்திருக்கிறது இதுநாள் வரையில்.

இனக்கலவர காலத்தில் நிகழ்ந்த வன்கொடுமைகளின் சாட்சியம் கமலம். இரத்தினபுரியில், சோமு வேலைபார்க்கும் அதே இடத்தில்தான் கமலத்தின் கணவன் கொடூரமாகக் கொல்லப்பட்டதும், அவளே வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டதும். ஆனால் இன்னும் ஒரு போலித் தனத்தில் அதையே உழைப்பதற்கான இடமாகக்கொண்டு சோமு திரும்புவது பற்றிய வசையே சிறுகதையின் ஆரம்பத்தில் கமலத்தின் வாயிலிருந்து வருவது. 'இன்னும் இந்தப் பு… அவங்கட… ஊ… போறாங்கள்' என்ற வசைவின் வார்த்தைகள், கதை முடிவில் சோமுவின் எண்ணமாக, கருத்தியலாக மாறுகிறது.




'தேசியம், தேசிய ஒற்றுமை என்றெல்லாம் அவன் பேசியிருக்கிறான். அதுவும் பிரச்சினையைக் கடத்தித் தள்ளிப்போட்டுத் தப்பப் பார்க்கும் அதே மனப்பான்மைதானா?' என அவனது சிந்தனைத் தொடர் துவங்கி, 'கச்சேரியடியில் உட்கார்ந்துவிட்டு, இரண்டு கிழமை தாடிவளர்த்து வழித்துவிட்டு அவன் திருப்திப்பட்டிருக்கிறான். அதே தப்பும் மனப் பான்மைதானா?' என்று அச் சிந்தனைத் தொடர் முடிவடைகிறது. ஆக இலங்கைத் தேசியம் கேள்வியாகிய அதேபோதில், தமிழ்த் தேசியத்தின் சாத்வீகமும் மு.த.வுக்கு உடன்பாடற்றதாகத் தோன்றியிருக்கிறது என நாம் சுலபமாக ஒரு முடிவுக்கு வரலாம்.

சர்வோதயம் சார்ந்து அவர் எவ்வளவுதான் பின்னாளில் எழுதியிருந்தாலும், இச் சிறுகதை உருவான காலத்தில் ஒரு தமிழ்த் தேசியவாதியாக தன்னை உணர்ந்துள்ளார் மு.த. அதுவும் இறுக்கமான நடவடிக்கைகள் அவசியமென்ற கருத்துக் கொண்டு.

அப்படியில்லையென்று வாதாடுவதெல்லாம் வீண்.

ஆச்சியின் அறிவுரையின்படி ஒரு சாதுவாக வளர்ந்திருக்கும் சோமு, இந்த நடுத்தர வர்க்கத்து அடங்குதலை பின்னால் மிகக் காட்டமாக விமர்சிப்பான். 'சோமுவை ஏதோ குத்திற்று. திடீரென்று ஆச்சி காட்டிய வாழ்க்கையில், கலாச்சாரத்தில், ஏதோ குறையொன்று இருப்பதுபோல் முதன் முதலாக அவனுக்கு ஏதோ ஒன்று உணர்த்திற்று.' இது அச் சமூகத்தின் அடங்கு, பணிவாயிரு, அதுதான் வாழ்க்கைக்கு நல்லது என்ற மந்திர வாசகத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வரிகள். இதுவே என்றோ ஒரு தலைமுறையின் சிந்தனையில் நெருப்பு விழுந்துவிட்டதைத் தெரிவிக்கிற வரிகளுமாகும்.

மு.த.வின் ஒட்டுமொத்தப் படைப்பும் இக் கருத்தை உறுதிப்படுத்தாதுதான். ஆனால் அதுவா முக்கியம்? அக் கருத்து ஒரு கால கட்டத்ததாய் இருந்தது கண்டடையப்பட்டாலும்தான் போதுமானது. நான் முன்னே சொன்னதுபோல மு.த.வின் இலக்கியத் தகைமை நாற்பது ஆண்டுகளின் முன்னமேயே ஸ்தாபிதமாகிவிட்டது. இன்று கட்டவிழ்ப்பின் மூலம் காணக்கூடிய அம்சங்கள்தான் கவனம் பெற வேண்டியவை.

■ ■ ■

# கொரில்லா 'துறவி"* மு.தளையசிங்கம் என்னும் ஈழத்து மெய்யியலாளர்



மாமூலன்

I

மு.தளையசிங்கத்தை (இனி மு.த.) ஒரு எழுத்தாளராகவும் ஓர் இலக்கிய விமரிசகரா கவும் பார்ப்பது பொதுவனதுதான். அவர் தனது நுழைவை ஓர் படைப்பளியாகத் தொடங்கியிருக்கிறார். அதிலிருந்து மருவி இலக்கிய விமரிசகராக மாறியிருக்கிறார்.

இந்த நிலையில் நின்று கொண்டு அவர் எழுதிய எழுத்துக்கள் இலக்கியப் பரப்பின் எல்லைக்குப் புறம்பே பரவுகின்றன என்பது தான் இங்கு மு.த வைப்பற்றிச் சுட்டவேண்டியது. அவருடைய 'புதுயுகம் பிறக்கிறது' கொஞ்சமாகவும் 'போர்ப்பறையும்' 'மெய்யுளும்' முழுமையாகவும் இலக்கியம் என்ற தளத்திலிருந்து விலகி அடுத்தகட்ட அறிவுத்தோற்றவியல் (Epistemological) எல்லைக்குள் நுழைந்து நிற்பவை.

ஆகவேதான் மு.தவை ஓர் இலக்கியவாதி யாகப் பார்ப்பதைவிடவும் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் வாழ்ந்த மெய்யியலாளராகப் (Philosopher) பார்ப்பது உரியது.

முதலாவதாக மு.தவின் எழுத்துக்கள் மிகவும் கொஞ்சமே கிடைப்பதாலும், அவர் வாழ்ந்து செயற்பட்டுச் செய்துவிட்டுச் சென்ற பதிவு களும் கொஞ்சமாகவே இருப்பதாலும் அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு அவர் ஓர் தமிழின் சிந்தனை மரபுக்குரிய அடையாளம் அல்லது பிரதிநிதி என்று சொல்லவும் முடியாது. ஒருவருடைய சிந்தனைத்த திறத்தை எடைபோடுவதற்கு அவருடைய நீண்ட வாழ்நாள் தேவையற்றதாயினும் வெளிப்பாடுகள் தேவையாயிருக்கின்றன.

இரண்டாவதாக அவருடைய எழுத்துக்களில் கிடைப்பவற்றில் முதலில் வெளிவந்த ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி மற்றும் தொடக்க காலப் படைப்புக்களில் இலக்கியம் தூக்கி நிற்கிறது. ஆக மிஞ்சியிருக்கும் எழுத்துக்களில் மெய்யியல் சிந்தனை என்ற அளவில் பார்ப்பதற்கு வெளிப்படையாக உள்ளவை மூன்றே நூல்கள்தான்.

அதைவைத்துக்கொண்டு மட்டும் ஒருவருடைய சிந்தனைப் போக்கைப் படம் போட்டுப் பார்த்துவிடமுடியாது என்றாலும் மு.தவின் துருத்திக்கொண்டு வெளித்தெரியும் கருத்துக்கள் சொல்பவற்றை அடையாளம் காண முடிகிறது.

மு.தவின் வெளிப்பாடுகளை இரு நிலைகளாகப் பிரிக்கலாம்.

ஒன்று: இலக்கியக் காலகட்டம் (episteme?). இரண்டு: மெய்யியல் காலகட்டம்.

இரண்டாம் பகுதியில் அவர் நின்ற நீண்ட காலம் செயற்பட்டிருப்பாரானால் முற்று முழுதான ஆன்மீக வாதியாக மாறியிருப்பாரோ என்று ஐயம் தரும்படி எழுத்துக்களில் குறிப்புக்கள் கிடைக்கின்றன.

ஆயினும் அவரது பிற வெளிப்படுத்தல்களில் அவருடைய தேடல் திறன் பல இடங்களில் வெளிப்பட்டிருப்பதையும் நாம் கணமுடியும். அந்தத் தேடல்திறம் அவரை ஓர் ஆன்மீக வாதியாக முற்றுமுழுதாக அமுங்கிப்போய்விட விட்டிருக்காது என்ற ஊகிக்கவும் இடமுண்டு.


முத.வின் இலக்கியக் காலகட்டத்தில் எழுதிய வற்றை முன்புள்ள பகுதிகளில் அவருடைய பார்வைகளாகப் பாரத்திருக்கிறோம். அவை விமிரிசனமாயினும் அவற்றுக்கு அடுத்த நிலையில் அதாவது ஏழாண்டு இலக்கிய வளர்ச்சிக்குப்பிற்பாடு, அவர் எவ்வகை இலக்கியம் மனிதருக்குத் தேவை என்பதை முன்வைக்கிறார்.

மெய்யுளில் அவர் எடுத்த எடுப்பிலேயே இலக்கியம் என்றால் என்ன? எப்படியிருக்க வேண்டும்? அது எதற்காக? போன்ற வினாக்களுடன் புறப்படுகிறார். இந்த இடத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மு.தவின் மெய்யியல் என்பது நம் கட்டமைப்பில் உருவாவது. அவர் செய்தது அல்ல.

அவர் தனது எழுத்துக்களை இலக்கியத்தின் அடுத்த கட்டமாகத்தான் எழுதிவந்தார்.

அந்தவகையில் பூரண இலக்கியம் என்பதே இலக்கியத்தின் உண்மை நோக்கத்தை நிறைவேற்றும் தன்மையுடையது என்று முன் வைக்கிறார்.

பூரண இலக்கியம் தனது சமூகத்தைக் குணப்படுத்தவேண்டும் என்கிறார். நோயுற்ற சமூகத்துக்கு பூரண இலக்கியம் குணப்படுத்தல் என்ற வகையில் பணியாகச் செய்ய விருப்பவை மனித குலத்துக்கு தேவை என்கிறார். சமூகத்தின் நோய்களைத் தீரப்பதே இலக்கியத்தின் பணி. அதனைச் செய்யத் தகுதியுடையதே பூரண இலக்கியம்.



உள, பொருளாதார, சமூக வேறுபாடுகள் உள்ள நிலையில் அதை ஏற்றுக்கொண்டு வாழும் மனிதர் நோயாளிகள்தான் என்கிறார். அதற்கு தீர்வு தர மார்க்சியத்தால் முடியாது என்கிறார். உலகில் உள்ள பிற கோட்பாடு கள் போதுமானவையல்ல.


அவரைப்பொறுத்தவரை இருக்கும் எந்த ஒரு அணுகுமுறையும் சமூகத்தின் ஒட்டுமொத்த நோயையும் தீர்க்க வல்லது அல்ல. அந்நிலையில் ஒட்டுமொத்த சிக்கலையும் தீர்ப்பதற்கு ஒட்டுமொத்த அணுகுமுறைச் சேர்க்கையிலான ஒன்று தேவை.

மனிதரை பிராய்டு பார்த்ததுபோலவோ (உள வேறுபாட்டுச்சிக்கல்களை மட்டும் மமையமாக்க கொண்டு) மார்க்ஸ் பார்த்தது போலவோ (பொருளாதாரா அடிப்படையிலான வேறுபாடுகளை மட்டும்கொண்டு - வரலாற்று - இயங்கியல்) அல்லது மதங்களின் தனிப்பட்ட அணுகுமுறைகளை மட்டும்கொண்டு உலகின் சிக்கல்கள் தீரக்கப்படமுடியாதவை.

ஆக அதற்கான வழிமுறைகளாக அந்நதச் சமூகத்தில் உள்ள ஆன்மீக அல்து மரபாக வழிவந்த மனிதநேய அணுகுமுறைகள் மற்றும் மேற்சொன் வழிமுறைகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த அணுகுமுறையே ஒட்டுமொத்த நன்மைதரும் சமூகக் கட்டமைப்பை உருவாக்கும். மனிதரை மகிழ்வாக வாழவைக்கும் என்ற கருதுகிறார்.

> மார்க்ஸ், எகல் (Hegel) அரவிந்தர், புதிய அறிவியல் அறிஞர்கள் (Julian Huxley Teilhard de Chardin )ஆகியோரது *'...கருத்துக்களோடும் இணைத்து புது அடிவானங்களைத் தொடும் வகையில் விரித்து வளர்ப்பதே இன்றைய சரித்திர, பரிணாம வளர்ச்சிச் சுழலை அதன் முடிவுக்கும் அடுத்த சுழல் தளத்துக்கும் கொண்டுவரக்கூடிய முழுமையான பூரண தத்துவமாகவும் பூரண வாழ்க்கை முறையாகவும் இருக்கும்."... 'அதையே சர்வோதயப் பொதுவுடமை என்று நான் அழைக்கிறேன்". (மெய்யுள், பக்: 32)* என்கிறார்.

ஆக உலகு நல்லபடி இருக்க மனிதர் நல்லபடி வாழ இருக்கும் கோட்பாடுகள் கொள்கைகள் வழிகாட்டல்கள் போதாது. அவற்றில் மாற்றம் சீர்திருத்தம் வேண்டும். அவற்றை மாற்றி தொகுக்கவேண்டும். அதன்வழியாக மனிதர் மகிழ்வாய் வாழ வழிபிறக்கும். அந்த ஓர்மத்துடன் சர்வோதயத்தை உருவாக்கும் ஓர்மத்துடன் இருக்கும் படைப்பே பூரண இலக்கியம் என்பது மு.த.வின் கருத்து.



*'...இலக்கியத்தை மட்டும் நோய் தீர்க்கும் மருந்தாக ஏற்றுக்கொண்டால் போதாது... இனிமேல் எல்லாத் தொழில்களையுமே அது கலையாகவும் இலக்கியமாகவும் மாற்றப் போராடவேண்டும்..." (மெய்யுள், பக்:33)*

*'பூரண இலக்கிய வளர்ச்சி சமூகத்தின் சகல துறைகளின் வளர்ச்சியாகவும் பரிணமிக்கும். அதனால் இன்றைய எழுத் தாளன் அரசியலோடு மிக நெருக்கமான தொடர்புடையவனாக இருக்கவேண்டும்." (மெய்யுள், பக்:35)*


*'அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக கலைஞர்களும் எழுத்தாளர்களும் இருக்காமல் அவர்களே அரசியல்வாதிகளாகவும் இருக்கவேண்டும். ஒருநாட்டின் மந்திரி சபையில் குறைந்தது இரண்டொரு அரசியல் வாதிகளான கலைஞர் களும், எழுத்தாளர்களும் இனிமேல் இருந்தால்தான், பூரண முழுமைக்காக மத்தியல் ஒப்படைக்கப்படும் அதிகாரம் பயங்கரமான சர்வாதிகாரமாக மாறாமல் இருக்கும்." (மெய்யுள், பக்:37)*




*'பூரண இலக்கியமும் பூரண வாழ்க்கையும் இவற்றோடு மட்டும் மலராது. ஒவ்வொருவனும் தன் அக ஆழத்தை கண்டு பிடிக்காத வரைக்கும் முழுமையும் பூரணத்துவமும் வரப்போவதில்லை." (மெய்யுள், பக்:38)*

*'ஒரு சமூகத்தின் உயிர்த்துடிப்பை, அதன் உண்மையான மரபுத்துடிப்பைத் தொடும் எழுத்தாளர்கள் இன்று ஈழத்தமிழச் சமூகத்திற் காணப்படுகின்றனர். அவர்கள் தம் சொந்தப் பிரச்சினைகளுக்கும், முழு உலகப்பிரச்சினைகளுக்கும் வழிகாணும் துணிவைக் கொண்டவர்களாக இருக்கின் றனர்." (மெய்யுள், பக்:97)*

*(ஈழத்தின் இலக்கியத்தின் அடிநாதமான போர்ப்பறையைக்)'... கண்டவர்களுக்கும் கேட்வர்களுக்கும் இன்றைய உலக இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத் தமிழ்*



*எழுத்தாளர்கள் எவ்வாறு தலைமை தாங்கலாம் என்ற சந்தேகம் இருக்க முடியாது." (மெய்யுள், பக்:97)*

மு.தவின் முற்கூறல் ஒன்று எவ்வாறு மிகச் சரியாக இருக்கிறது என்று பாருங்கள்:

> *'ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் கூட்டுமனம் எல்லா நிலைகளிலும் ஏதோ ஓர் அளவில், எதோ ஓர் அர்த்தத்தில் போர் என்ற ஒன்றுக்கு தயார்ப்படுத்ததுவதாகவே இருக் கிறது. ஆதன் கூட்டுமனத்தில், இடைத் தளத்தில், அடித் தளத்தில் எங்கும் ஏதொ ஓர் வகையில் போர் என்ற ஒன்ற உருப்பெற்றுக்கொண்டு இருக்கிறது." (மெய்யுள், பக்:99)*

எந்த ஒரு இடத்திலும் 'இது போதும்" என்று அவர் எதையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை என்பதுதான் அவரை ஓர் மெய்யிய லாளராக கருத இடமளிக்கிறது. மெய்யிய லாளருக்கு இருக்கவேண்டிய தொடர்ந்த அடுத்தகட்டத் தேடல், மீண்டும் மீண்டும் கேள்வி என்பன மு.தவிடம் திரும்பவும் திரும்பவும் எழுகின்றது.

51ம் பக்கம் பார்க்க...

# கொரில்லா 'துறவி'...

50ம் பக்கத் தொடர்ச்சி...

மு.தவின் மெய்யிலைச் சுருக்கிப் பின்வருமாறு சொல்லாம்:

சமூகத் தினைக் குணப்படுத்த வேண்டியிருக்கிறது. இது அனைத்துத் தளங்களிலும் நடக்கவேண்டும். அது இலக்கிய வழியாகச் சாத்தியம். பூரண இலக்கிய வழியாகச் சாத்தியப்படும். ஆர்தர்.சி கிளார்க்கின் எழுத்துக்கள் எவ்வாறு பல கோட்பாடுகளுக்கு வழிவகுக்கின்றனவோ அதேயளவிற்காவது இலக்கியம் சமூகத்தில் விளைவைத் தரும்.

இந்தப் பூரண இலக்கியம் எதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படவேண்டும் என்ற தேடல் வேண்டும். அதற்கு பொருள்முதல்வாதமோ அல்லது கருத்துமுதல்வாதமோ தனியாகப் பலன்தராது. அதாவது இதுவரைக்குமான மதங்கள் சார் வழிமுறைகள் அல்லது மார்க்சிய வழிமுறைகள் போதாமையுடையன.

*ஞானப் பொதுவுடமையும் பொருளாதாரப் பொதுவுடமையும் ஒன்றை ஒன்ற தழுவி வளரவேண்டும். (மெய்யுள், பக்:67)*

*'இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தேவராச்சியம் அண்மித்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது...ஆனால் அந்த அறிவித்தலை நம்பியவர்கள்... தேவராச்சியத்துக்குரிய, பொதுவுடமை வழியை இதுவரை நம்பியதில்லை. அதே போல் வழியை நம்பிய பொதுவுடமைவாதிகளோ இதுவரை இறைவனை நம்பியதில்லை. அதனால் இரண்டும் பூரணமாக வென்றதில்லை." (மெய்யுள், பக்:66-67)*

எனவே ஆன்மீக அடிப்படையிலான புரிதலுடன் முன்சொன்ன இரண்டையும் உள்வாங்கிய மூன்றாவது அல்லது புதிய அணுகுமுறை வேண்டும். இந்தப் புதிய அணுகு முறை பேர்ஞானத்தை அதாவது தெளிவான பேரறிவைத் தரும்.

இதுவே மெய்முதல் வாதம் என்று அவர் பெயரிடுவது.

இதற்காக அவர் துணைக்கு அழைப்பது இந்தியாவின் தற்போதையச் சிந்தனைகளை உள்வாங்கி விழுங்கிவிட்ட சங்கர அத்துவைதம் என்றும் ஒருமையியலைத்தான்.

கருத்தும் பொருளும் ஒன்றுதான் என்பதை அழுத்த அவர் பிரம்மமமே சக்தி அல்லது சக்தியே பிரம்மம் என்ற ஒருமையியல் கோட்பாட்டை எடுக்கிறார்.

அவற்றின்மூலம் மக்கள் பெறும் மெய்முதல் தெளிவிலிருந்தே மனித குலத்தின் விடுதலை அடையப்பெறலாம்.

அவ்வாறு வரும் மனிதக்குலச் சிறப்பு நிலையை அனைத்தும் கிடைக்கும் சர்வோதயம் என்கிறார்.

*'சர்வோதயம் என்றால் என்ன?*

*சகல மக்களினதும் எழுச்சியையும் சகல துறைகளினது வளர்ச்சியையுமே குறிக்கிறது." (மெய்யுள், பக்:131)*

*'அறிவு, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடமை" ஆகியன அனைத்தும் சேர்ந்து இந்தத் தளத்தில் ஏற்பட்ட எழுச்சி கொண்டுவரும் அல்லது வரும் எழுச்சியில் உருவாகியிருக்கும். (மெய்யுள், பக்:61)*

II

தளையசிங்கம் வைத்த கருத்துக்களில் பல தென்னிந்தியச் சிந்தனைகளின் தாக்கத்தில் எழுந்தவை. அதேவேளை பொதுவுடமையின் நன்மைகளை அவர் உணராமல் இல்லை. இந்நிலையில் அறிவியலின் புதிய கண்டுபிடிப்புக்களையும் அவர் எடுத்து புதிய மானிடத்தின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும் என்கிறார்.

இந்தவகையில் அவரைப்பாதித்த சிந்தனையாளர்களில் அரவிந்தர் முதலாக யேசு, மார்க்ஸ் எனப் பட்டியல் தொடர்கிறது. அறிவியலாளர் என்ற வகையில் இருவரை அடிக்கடி தனது எழுத்துக்களில் குறிப்பிடுகிறார். ஆச்சரியப்படும் வகையில் இருவரும் கூர்ப்பினைப்பற்றிப் பேசியவர்கள். அதிலும் முதலாமவர் ஒரு துறவி. Teilhard de Chardin என்னும் பிரஞ்சுத் துறவி. யேசு சபையைச் சேர்ந்த இவரையும் அவரது எழுத்துக்களையும் அப்போதைய போப் தடை செய்து வைத்திருந்தார். அவர் இறந்த பின்பு 1955இல் தான் அவரது எழுத்துக்கள் வெளியிடப்பட்டன. மற்றவர் Alduos Huxley இன் உடன்பிறப்பான Julian Huxley. இவர்தான் யுனெஸ்கோவின் முதல் தலைவரும் என்பது உபரிச் செய்தி.

முன்சொன்ன சமூக ஆன்மிகச் சிந்தனையாளர் போலவே இந்த அறிவியல் அறிஞர் இருவரும் அந்தக் காலத்தின் மிகப்பிரபலங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மு.தவின் முன்வைப்புக்களின் மீது விமரிசனங்கள் இருக்கின்றன. இவரைப்பற்றி எழுதிய எழுத்துக்களின் மீதும் உள்ளன. அதே போல அவருடைய எழுத்துக்களில் உள் முரண்பாடுகள் உள்ளன எனவும் எண்ண இடமுண்டு.

(இது ஒரு கட்டுரையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட, சுருக்கப்பட்ட பகுதி.)


கொரில்லா 'துறவி' * (மெய்யுள், பக்:33):

■ ■ ■

# மு.தளையசிங்கம்: இந்த யுகத்தின் சத்திய...

46ம் பக்கத் தொடர்ச்சி...

தையும் தகர்த்துக் கொண்டு நித்திய சத்தியத்தை நோக்கிய நேரடி அனுபவரீதியான ஊடுருவல்களுக்குரிய கலை இலக்கிய வடிவமே 'மெய்யுள்'' என அவர் தனது முன்னுரையில் கூறுகிறார். ''பூரணமின்மையே இன்றய மனிதனது நோய். இலக்கியம் பூரணமடையும்போது அது நோய் தீர்க்கும் மருந்தாகிறது. அதன் பொருட்டு



சகல தொழில்களுமே கலையாகவும் இலக்கியமாகவும் மாற்றப்பட வேண்டும். இதற்காக இன்றய ஒவ்வொரு எழுத்தாளனும் தன்னை அர்ப்பணிக்க வேண்டும்'' என்று அவர் வாதிடுகிறார்.

மு.த. புங்குடுதீவுக்கு மாற்றலாகியது அவரது சுய பூரணத்துவத்தின் இறுதிக்கட்டமாகவே என்றும் சமூக மாற்றத்துக்கான அவரது முயற்சிகளுக்கும், போராட்டங்களுக்கும் செயல் வடிவம் கொடுப்பதற்கான பணிப்பின் வடிவமே இந்த இடமாற்றம் என்றும் இப்போது நம்பவேண்டியிருக்கிறது. இக்கால கட்டத்தில் அவர் பல இளைஞர்களைத் தன் வசம் ஈர்த்தார். பிரச்சினைகளுக்கு வன்முறையே தீர்வு என்று போர்க் கோலம் பூண்டிருந்த இளைஞர்கள் பலர் இவரது சாத்வீகக் கட்டுக்குள் அகப்பட்டது ஆச்சரியமாகவிருந்தது.

ஆன்மீகத்தின் மூலம் பொருளை நாடும் கருத்து முதல்வாத ஆசார மரபை நிராகரித்த அதே வேளை பொருள் மூலம் ஆன்மீகத்தை நாடிய பொருள் முதல்வாதத்தையும் நிராகரித்தத்ன் மூலம் இவ்விரண்டிற்குமே பொதுவான அடித்தளமாகவிருந்த சத்தியத்தைத் தனது முதல்வாதமாகப் பிரகடனம் செய்தார். கருத்து, பொருள் முதல் வாதங்களால் அதிருப்தியடைந்திருந்த பல இளைஞர்கள் இவரிடம் புகலிடம் கண்டனர். சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்து பல ஆத்மீகப் பயிற்சிகளை இளைஞர்களுக்கு அளித்துவந்தார். இவரது சர்வோதய இயக்கம் ஆரியரத்தினாவின் பராமரிப்பிலிருந்த- சமூகப் பணிகளில் மட்டுமே குவிவு பெற்ற - இயக்கமல்ல. மாறாக, வினோபாபாவேயின் ஆன்மீக மரபினைத் தழுவிய சாத்வீக குணவியல்புகளை முதன்மைப்படுத்தும் சர்வோதய இயக்கமாகவே இருந்தது. இதனாலேயே அவர் ஆத்மீகப் பயிற்சிகளை முன்னின்று நடாத்தினார். இவரிடம் கல்வி கற்ற மாணாக்கர்கள் மட்டுமல்லாது இதர பணிகளை மேற்கொண்ட பல இளைஞர்களும் இணைந்து ஒரு ஆன்மீகப் பேரலையாக உருவெடுத்தது.

தனது சத்திய சேனையின் விரிவு படுத்தலின் ஆயுதமாக அவர் கலை இலக்கியத்தைப் பாவித்தார். 'அதிருப்தியாளனே போராட வருவான், அதிருப்தியாளர்களில் கலைஞர்கள் நுட்பமான உணர்வுகளும், அகலமான மன விரிவுகளும், ஆழமான சிந்தனையும் கொண்டவர்கள். அடுத்த கட்டப் பரிணாம வளர்ச்சிக்குரிய அலைகள் அவர்களிடமே உண்டு' என்று மு.த. நம்பினார். சு.வில்வரத்தினம், மு.பொன்னம்பலம், 'பூரணி' மகாலிங்கம் போன்ற பலர் அவரது வேட்கையைத் தணித்தனர். 1970ல் 'சத்தியம்' என்ற பத்திரிகை இவரால் ஆரம்பிக்கப்பட்டது.

சர்வோதயக் கோட்பாட்டின் பிரயோகப்படுத்தலின் அடுத்த கட்டமாக புங்குடுதீவையே மீண்டும் ஒரு தடவை களமாகக் கொள்கிறார் மு.த. 1971ம் ஆண்டு கண்ணகையம்மன் கோவில் நன்னீர்க் கிணறுகளில் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் அள்ளுவதற்கு வழி செய்து கொடுக்கும்படி சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடாத்தினார். புங்குடுதீவு மக்கள் சிலரின் அகோரமான முகங்களை இப் போராட்டம் உலகுக்குக் காட்டியது. காவற்துறையினராற் கைது செய்யப்பட்டு மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டார். இதே போன்று காளி கோவிற் பிரகாரத்தில் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டபோது 'உண்டியல் திருடியதற்காக' மு.த. கைதுசெய்யப்பட்டார். இதற்குப் பொய்ச் சாட்சி சொன்னவர் எமதூரின் இன்னுமொரு பிரபல 'சமூகத் தொண்டன்' என்பது வெட்கத்துக்குரிய விடயம்.

தனது மெய்முதல்வாதக் கோட்பாட்டைப் பிரயோகித்த முதல் தளமாக அவர் புங்குடுதீவை எடுத்துக் கொண்டார். புங்குடுதீவு மக்களின் மாபெரும் பண்புகளில் ஒன்று அவர்களது கலை இலக்கியங்களின் மீதான அதீத பற்று. வாழ்க்கையே கலை, வாழ்க்கையே பேர் இலக்கியம் என்ற வகையில் அதை ஆற்றுப்படுத்தலின் தேவையாக மெய்முதல்வாதத்தைப் பிரயோகிக்க மிகவும் பண்பட்ட தளமாக புங்குடுதீவை அவர் தேர்ந்ததில் வியப்பிருக்க முடியாது.

புங்குடுதீவு மக்களின் அரசியல் பாரம்பரியம் பொதுவாக தமிழரசுக் கட்சியின் நிழலாகவே இருந்து வந்தது. மு.த. தன் இளமைக் காலங்களில் தமிழரின் விடுதலைக்காக வன்முறையே ஒரே வழி என்கின்ற போக்கினையே கடைப்பிடித்து வந்தார். இரத்தினபுரி வாழ்க்கையும், அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் பல்வித குணவியல்புகளுடைய மாணவர்களின் பாதிப்பும் அவரது சிந்தனைத் தளங்களை மாற்றியமைத்தன. கலை இலக்கியப் பேர்வழிகள் சிலரின் போலித்தனம், அரசியல்வாதிகளின் கபடங்கள் எல்லாமே அவரது உருவாக்கத்தில் பெரும் பங்கு பெறுவன. இருப்பினும் கலை இலக்கியத்தையோ அல்லது அரசியலையோ அவர் நிராகரித்துவிட்டு துறவியாகிவிட முயற்சிக்கவில்லை. மனித மேம்பாட்டிற்கு சிந்தனைத் தெளிவும் பூரணத்துவமும் பெறுவதுமே ஒரே வழி என்று அவர் உண்மையிலேயே நம்பினார். கலை இலக்கியக் காரனோ, அரசியல்வாதியோ அல்லது எந்தவொரு சாதாரண மனிதனோ பூரணமின்மை என்ற தனது நோயை உணரும் போது தனது போராட்டத்தில் வெற்றி பெறுவான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர் இயங்கினார். தனது சத்திய இயக்கத்தின் மூலம் எதையும், எவரையும் பூரணமாக்க முடியும் என்பதில் அவர் அசைக்க முடியதகம நம்பிக்கை வைத்திருந்தார். அதனால் அவரது முகாமிற்கு யார் வருகிறார் யார் போகிறார் என்பதில் அவர் அதிகம் அக்கறை காட்டவில்லை.

அவர் குறுகிய கால அரசியல் பிரவேசமும் இப்படியான ஒரு சத்திய பரிசோதனையே. தனது சர்வோதய இயக்கத்தின் சார்பில் புங்குடுதீவின் முன்னாள் சட்டத்தரணியாகிய ப.கதிரவேலு அவர்களைத் தேர்தல் வேட்பாளராக ஆதரித்தார். இதற்காக மு.த.வின் சீடர்கள் பலர் வெளிப்படையாகவே அதிருப்தியைத் தெரிவித்தனர். ஆனாலும் தனது பரீட்சையில் வெற்றி கிடைக்கும். என்று அவர் உறுதியாக நம்பினார். ஆனாலும் அவரது பரிசோதனையில் அவருக்குக் கிடைத்த வெற்றிகளைவிடவும் கிடைத்த எதிரிகளே அதிகம்.

அவரது இறுதிக்காலத்தை அவசரப்படுத்தியதும் இப்படியான நிகழ்வுகள்தானோ என்ற ஐயம் எனக்கு எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அவரது சத்திய பரிசோதனையில் முடிதேடிப் போகாது அடிதேடிப் போனதால் தான் அவர் விஷ்ணுவாக முடிந்தது என்பது மட்டும் திருப்தி.

'கருத்துகள் ஏற்கப்படுவதும் நிராகரிக்கப்படுவதும், அவற்றில் காணும் உண்மைக்காக அல்ல. எது சௌகரியமானது, எது தனக்குப் பாதுகாப்பானது என்பதைப் பொறுத்தே கருத்துக்கள் ஏற்கப்படுவதும் நிராகரிக்கப்படுவதும் நிகழ்கின்றன. இதன் காரணமாகவே நிறுவனம் சார்ந்தவை, கட்சி சார்ந்தவை, சாதி சார்ந்தவை, இரைச்சல் பலம் சார்ந்தவை, சலுகைகள் சார்ந்தவை ஏற்கப்படுகின்றன. தனிமனிதனின் குரல் எடுபடுவதில்லை' என்று விமர்சகர் வெங்கட் சுவாமிநாதன் அவர்கள் சொல்வார்கள்.

மு.தளையசிங்கம் ஒரு சத்திய காவலர். அவர் தனது சடவுடலை விட்டு சூக்கும உடலில் 'அது' வோடு ஆத்ம வாதம் புரிந்து கொண்டிருக்கிறார். தொப்புள் கொடி இன்னும் அறுக்கப்படவில்லை. மீண்டும் வருவார். நம்பிக்கை இருக்கிறது.

■ ■ ■